பக்கங்கள்-16 | தை 20,2013 | விலை-30.00

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

மலர்-01 | இதழ் -25

Tel&Fax:(+94)247451360-1, Hot line:0711850885 Email:tthinappuyalnews@yahoo.com

விளம்பரங்கள்

அனைத்துவகையான விளம்பரங்களையும் பிரசுரிக்க நாடுங்கள்...

தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

அன்பான வாசக நெஞ்சங்களே

எமது தினப்புயல் பத்திரிகை தொடர்பான அனைத்து விமர்சனங்களையும், ஆக்கங்களையும், வரவேற்கின்றோம்.



## ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் முடக்கப்பட்ட கடற்புலிகள்...

அமைச்சர் றிஷாட்

## சட்ட ரீதியான பிரதம நீதியரசர் நானே

- ஷிராணி பண்டார நாயக்க

## மாணவர் புரட்சி -விடுதலையை வென்றெடுக்கும் காரணிகள்




-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# விடுதலைப்புலிகளின் கப்பல் வருவதை தொலைபேசியில் ஒட்டுக்கேட்டது இந்திய உளவுத்துறை

விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் இலங்கையில் முற்றுப்பெற்ற நிலையயில், இவர்களின் இறுதிக்கட்டத் தோல்விற்கு பல்வேறு காரணங்கள் பல தரப்பினரிடமிருந்தும் கூறப்பட்டு வரும் இந்த காலகட்டத்தில், தொடர்ச்சியாக எமது தினப்புயல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு வந்தது. அந்த அடிப்படையில், மற்றும் ஒரு புதிய தகவலை இப்பத்திரிகையானது அடியெடுத்து வைக்கிறது. அதன் ஒரு கட்டமாக 2002 ஆம் ஆண்டு வரை விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து பெற்று வழங்கிக்கொண்டிருந்தவர் குமரன் பத்மனாதன் எனப்படும் கே.பி தான் இதே கால கட்டத்தில் கே.பி யிடம் இருந்து அந்தப் பொறுப்பு விடுதலைப்புலிகளின் வேறு ஒரு பழைய உறுப்பினருக்கு கையளிக்கப்பட்டது. இதனையும் இந்திய மத்தியப் புலனாய்வுத் துறை இலங்கை இராணுவத்தின் உதவியுடன் அறிந்து கொண்டது.




விடுதலைப்புலிகள் இறுதிக்கட்ட யுத்தத்தில் தோல்வியடைய முக்கிய காரணமும், சண்டை செய்வதற்குப் போதிய ஆயுங்கள் இவர்களுக்குக் கிடைக்கப்பெறாமையே ஆகும். இலங்கை இராணுவம் இவ் யுத்தத்தை எப்படி யாருடைய உதவியுடன் வெற்றி கண்டது, யார் யார் இவர்களுக்கு உதவி செய்தார்கள், எப்படிச் செய்தார்கள் என்று பார்கின்றபொழுது இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடை பொற்றுக்கொண்டிருந்த போது இச்சமாதனப் பேச்சுவார்த்தையை சாதகமாகப் பயன்படுத்திக்கெண்ட இலங்கை அரசும், இந்திய அரசும் தமது புலனாய்வு நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் மீதும், வன்னிப் பெருநிலப்பரப்பின் மீதும் கட்டவிழ்த்து விட்டிருந்தது. இவ்வாறான நடவடிக்கையின் மூலம் விடுதலைப் புலிகளின் சில முக்கியமான இரகசியம், உளவு நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் கசியத் தொடங்கியது.

இதன்போது விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவில் அங்கம் வகிக்கும் துரோ-ணர், கீர்த்தி, பிரபா, செம்மண்ணன் ஆகியோர் இராணுவப் புலனாய்வு நடவடிக்கைகளை பிரபாகரனின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு உட்பட கொழும்பு பறநகர்ப் பகுதிகளிலும் தமது புலனாய்வு நடவடிக்கைகளை மிகவும் கச்சிதமான முறையில் மேற்கொண்டு வந்தனர். இக்கால கட்டத்தில் இராணுவப்புலனாய்வில் பணிபுரிந்து வந்த புளோட்மோகன், முத்தலிப் உட்பட 29 புலனாய்வு அதிகாரிகள் விடுதலைப்புலிகளின் பிஸ்டல், ம்ற்றும் கிளேமோர்த் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இக்கால கட்டத்தில் விடுதலைப்புலிகளின் கடற்ப்படை மிகவும் வலிமையாகக் காணப்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கு அக்கால கட்டத்தில் ஆயுதங்கள் போதுமான அளவு வந்து கொண்டிருந்தது. இதன் காரணமாக விடுதலைப்புலிகளை மரபு ரீதியாகத் தோற்கடிப்பதற்கு இலங்கை இராணுவத்தினால் கைகூடாமல் போன காலகட்டத்தில்தான், இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபா-கரன் ஆகியோர் சமாதனப் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்தபோதே, 2002 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரின் போருக்கு உகந்த வகையில் எப்படி மாற்றியமைக்கவேண்டும் என்ற தந்திரோபாயத்தை அமைத்துக்கொடுத்தது அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சுதான்.

இதன் போது அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு யுத்த உத்திகள் திட்டமிடும் குழு ஒன்று இலங்கையில் 10 நாட்கள் தங்கியிருந்து இலங்கை இராணுவத்தினருக்கு யுத்த ரீதியில் எவ்வாறு வெற்றி காணவேண்டும் என்றும், விடுதலைப்புலிகளின் இயலும், இயலாமையும், எவை என அவதானித்து இயலாமையை அறிந்து கொண்டு யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமானால் இலங்கை இராணுவத்தின் கடற்படையினரை நன்கு பயிற்றுவித்து தயார்ப் படுத்தவேண்டும் என அந்தக் குழு ரணில் விக்கிரமசிங்கவிடம் கலந்து ஆலோசித்து முழுமையான அறிக்கை ஒன்றினை அவர் கையில் கொடுத்ததன்பின் தமது தாயம் திரும்பினார். இக்கால கட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நரி வேலைகள் அம்பலமாகத் தொடங்கியது. இதன் காரணமாக ர்ணில்விக்ரமசிங்க விடுதலைப்புலிகளின் இருப்பை சம்பாதிக்க தொடங்கின, அமெரிக்க அரசுடன் இணைந்து விடுதலைப்புலிகளுக்கு சதி புரட்சி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதன் ஒரு கட்டமாகவே 03-03-2004ஆம் ஆண்டு கருணா,பிரபா பிரிவு ஏற்பட காரணமாக இருந்தது. அதன் பின்னர் வடக்கு, கிழக்கு என்ற பாகுபாட்டை ஏற்படுத்தி வன்னிப் புலிகள் கிழக்கு புலிகள் என்ற இன முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கு காரணமாக இருந்தது ரணில் விக்ரமசிங்க அவர்களே, அதன் பிற்பாடு கருணா அணியினருக்கம், வன்னிப்புலிகளுக்கும் இடையில் போர் ஆரம்பமானது. இதனை அரசு தரப்பு ஏனோ தானோ என்ற வகையில் பார்த்துக் கொண்டிருந்தது. காரணம் விடுதலைபுலிகளின் கட்டமைப்பு, வலிமை என்பன, இதன் காரணமாக, ஒரு பின்னடைவை சந்திக்க ஏதுவாக அமையும், என்றும் கருதியே அது அவ்வாரே நடந்தேறியது. கிழக்கு மாகாணத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பேன் என்று கூறிய கருணா அம்மான் அந்த நிலைப்பாட்டை மாற்றியமைக்க வேண்டியதாயிற்று, இதன் காரணமாக விடுதலைப்புலிகள் அமைப்பு பல கூறுகளாக பிலவுப்பட்டது. பிள்ளையான் அணியென்றும், சின்னத்தம்பி அணியென்றும், சீலன் அணியென்றும், பாரதி அணியென்றும், தாத்தா அணியென்றும், ராணுவத்துடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தது.



இக்கால கட்டத்தின் போதும் வன்னிப்புலிகளும் சரனரியாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். கிழக்கு புலிகளும் சரனரியாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனுள் விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களும் அடங்குவர். விடுதலைப்புலிகளுக்கும் கருணா அணியினருக்கும் மோதல்கள் நடைப்பெற்று இருதி கட்டத்தை எட்டிய வகையில், விடுதலைப்புலிகள் ஐக்கிய நாடு சபையின் கவனயீர்ப்புக்குள் உள்ளாக்கப்பட்டு சமாதான பேச்சுக்களுக்கு உள்வாங்கப்பட்டது. ஆனால் நடைப்பெற்று முடிந்த ஏழுகட்ட பேச்சுவார்த்தைகளிலும் எந்த ஒரு தீர்வு திட்டத்தையும் எட்ட முடியாமல் போனது கவலைக்குறிய விடயமாகும். அதன் பின்னர் மாவிலாறு ஆரம்பித்த போர் விடுதலைப்புலிகளுக்கான போர், முல்லிவாய்க்கால் வரை விடுதலைப்புலிகளினால் தொடுத்து விடப்பட்டிருந்தது. இதனை சாதகமாக்கிக் கொண்ட இந்திய அரசு எவ்வாராவது பிரபாகரனை கொல்ல வேண்டும் என்ற முடிவை எடுத்துக் கொண்டது. இதற்கான திட்டங்களும் மறு பக்கத்தில் திரை மறைவில் நடைப்பெற்றுக் கொண்டிருந்தது.

இதற்கு முன்பதாக பிரபா-கரனைக் கொல்ல வேண்டியதாயின் அல்லது அவரின் படைகளை அழித்தொழிக்க வேண்டியதாயின் அவர்களுடைய வலங்களை முற்றாக துண்டிக்கும் வகையில் இலங்கை அரசு செயற்பட தொடங்கியது. இது அமெரிக்காவின் இராஜதந்திரங்களில் ஒன்று. விடுதலைப்புலிகளின் ஆயுத வலங்கள் முற்றாக நிறுத்தப்பட்டதால் தான் யுத்தத்தில் இலங்கை இராணுவம் வெற்றிபெற முடிந்தது.

அந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுது இலங்கை கடற்படையினரிடம் Cprvettes, Frigates, Destroyers, Battleships ஆழ்கடல் யுத்தத்தில் ஈடுபடும் மேற்குறிக்கப்பட்ட வசதிகள் இல்லாததன் காரணமாக இலங்கை பாதுகாப்பு அமைச்சர் மிகவும் கரிசனையோடு அமெரிக்காவில் இந்தியா நாட்டின் உதவிகளைப் பெற்றுக்கொண்டு கடற்படை தளத்தை வளர்த்துக்கொண்டது. விடுதலைப்புலிகளுடன் இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவம் 2009 ஆம் ஆண்டு வெற்றி பெற்றது.

விடுதலைப்புலிகளின் முக்கிய ஆயுதக்கப்பல்கள் ஒவ்வொன்றாக தாக்குதலுக்குள்ளாகி மூழ்கடிக்கப்பட்டன. பொட்டுஅம்மான், சூசை, கே.பி போன்ற விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தளபதிகள் கடற்வளத்தை பயன்படுத்திக்கொண்டு தமக்கேற்ற ஆயுதம், மருந்துப்பொருட்களை வரவழைத்து இறுதிக்கட்ட யுத்தத்தில் வெற்றி பெறலாம் என புலிகள் கங்கணம் கட்டி நின்ற போதிலும் இந்தியா இராணுவத்தின் தொலைபேசி (வயர்லஸ்) ஒட்டுக்கேட்பினால் விடுதலைப்புலிகளினால் சரியாக நேர்த்தியாக அவர்களுடைய கடல் வளங்களை தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போனது.

விடுதலைப்புலிகளின் இரு ஆயுதக்கப்பல்கள் 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் திகதி இலங்கையில் மட்டக்களப்பிலிருந்து கிழக்கே 240 Km தொலைவில் கடலில் வைத்து புலிகளின் மற்றுமொரு படகு கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது. அதுவும் டேங்கர் ரகக் கப்பல்தான். ஒருவகையில் பார்த்தால் இந்தக் கப்பல் முற்றுமுழுதாக கடற்படைத்தாக்குதலில் மூழ்கடிக்கப்படவில்லை. விமானப் படையின் குண்டுவீச்சும் இணைந்து தாக்குதல்களை மேற்கொண்டமையால் தான் புலகளின் இரு கப்பல்கள் ஆரம்ப கட்டத்தில் மூழ்கடிக்க உதவியாக இருந்தன. எவ்வர்று விடுதலைப்புலிகளின் உரையாடலை இந்திய அரசு ஒட்டுக்கேட்டது என்று பார்த்தபோது முதலில் விடுதலைப்புலிகளின் சட்டலைட் போன்ற உரையாடல்களை ஒட்டுக்கேட்பதன் மூலம் அந்தத் தகவல்களை அவர்கள் அறிந்துகொண்டனர். இதே நிலைப்பாடுதான் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைன் சட்டலைட் தொலைபேசிகளுடன் உரையாடியதன் காரணமாகவே அமெரிக்கா சதாம் ஹூசைனை கைதுசெய்ய உதவியாக இருந்தது.

கூடுதலாக சட்டலைட் தொலைபேசிகளை இந்தியா அரசு இலங்கை அரசுக்கு வழங்கி தொலைபேசி பாவனைகளை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் விஸ்தரித்தது. இந்த விஸ்தரிப்பின் காரணமாக விடுதலைப்புலிகளின் ஒரு சில முக்கிய போராளிகளின் கைகளில் இந்த சட்டலைட் தொலைபேசிகள் கிடைக்கப்பெற்றன. இந்த தொலைபேசி களினூடாக விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரிகளின் உரையாடல்கள் பதிவுசெய்யப்பட்டது. இந்த விடுதலைப்புலிகளின் உரையாடல்கள் எவ்வாறாக அமையப்பெற்றதெனில் வெவ்வேறு நாடுகளிலிருந்தும் ஆயுதங்கள் கொள்வனவு செய்வதற்காக இந்த இந்த கடற்தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு இன்னபெயர். என இரகசியக் குறியீடு என கூறியதை மிகவும் தந்திரோபாயமாக உள்வாங்கிக்கொண்ட இந்திய அரசு விடுதலைப்புலிகளின் போக்குவரத்து வழிகளை இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தியது.

இதன் காரண-



மாக விடுதலைப்புலிகளின் போக்குவரத்து வழிகளை இலகுவில் தாக்குவதற்கு வசதியாகவும் அமைந்திருந்தது. விடுதலைப்புலிகளின் கப்பல்கள் கரைக்கு வரும் ஒரு மணித்தியாலயத்திற்கு முன்பதாக துல்லியமான தகவல்களை இந்திய அரசு வழங்கிவிடும். விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல் இலங்கைக்கரையிலிருந்து 300 Km தொலைவிற்கு அப்பால் வந்தபோது கப்பலில் இருந்தவர்கள் சட்டலைட் பொருள்கள் மூலம் வன்னியிலுள்ளவர்களுடன் தொடர்பு கொண்டார்கள். வன்னியிலிருந்த புலிகளின் முக்கியஸ்தர்கள் பலரது சட்டலைட் போன்களை ஒட்டுக்கேட்பது புலிகளுக்கு தெரியாமலே இருந்தது.

இதற்காக இலங்கை இராணுவ தலைமையகத்தில் நிரவாக இராணுவ புலனாய்வு (Directorate of Military Intelligence) இலிருந்து அலுவலம் 2 ஆம் மாடியில் இயங்குகிறது. இது வலது பக்கத்திலுள்ள அறையொன்றினுள் விடுதலைப்புலிகளின் சட்டலைட் கோள்கள் ஒட்டுக்கெட்கும் கருவிகள் இருந்தன. 24 மணிநேரமும் இந்த ஒட்டுக்கேட்கும் கருவியினால் இராணுவ உளவுப்பிரிவினர் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்க.ள் இவர்கள் தொடர்ச்சியாக விடுதலைப்புகளின் சட்டலைட் போன்றவை இடைமறித்துக்கேட்டு அதற்கான நகர்வுகளை நகர்த்தியிருந்தனர். இதற்கு உறுதுணையாக இருந்ததும் இந்தியா தான்.இவ்வாறான இந்தியாவின் காட்டிக்கொடுப்பு அதற்கு மத்தியிலும் விடுதலைப்புலிகள் இறுதிவரை நின்று போரிட்டமை என்பது வரலாற்றில் ஒன்று.

சட்டலைட்டுக்களை விடுதலைப் புலிகள் பயன்படுத்தாமல் இருந்திருந்தால், ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் புலிகள் வெற்றி பெற்றிருக்க வாய்ப்பபுக்கள் இருந்திருக்கும் என்பதே உண்மை நிலவரம்.

– இரணியன் –

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## நீதித்துறையும் சட்டவாக்கமும் நிறைவேற்று அதிகாரமும் சமாந்தரமான நிலையில் பயணிக்க வேண்டும்.

இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின், 44 வது பிரதம நீதியரசராக, முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் அவர்கள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச முன்னிலையில், பதவிப் பிரமாணம் செய்து கொண்டதுடன், தனது கடமைகளையும் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

சிறிலங்காவில் தற்போது, முறுகல் நிலையை எட்டியுள்ள, இந்தப் பிரதம நீதியரசர் விவகாரம், தற்போது தேசிய எல்லைகளைக் கடந்து, சர்வதேச மட்டத்திலான கண்டனங்களுக்கும், உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட, பிரதம நீதியரசர், கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பிரதம நீதியரசரைப் பதிவி நீக்கம் செய்துள்ளார். இவ்விடயம் தற்போது, சர்வதேச அளவில் சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது.

இதேவேளை ஷிராணி பண்டாரநாயக்காவின் குற்ற நடவடிக்கைகளை, விசாரணை செய்வதற்காக, நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு, அதன் செயற்பாடுகள், தீர்மானங்கள் என்பன, சட்டத்திற்கு ஏற்புடையதல்ல, முரண்பாடானது, செல்லுபடியற்றது என, உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியிருந்தது. எனினும், பாரிய துரோகத்திற்கும், அநீதிக்கும் உள்ளாக்கப்பட்டு, தான் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக, அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த 32 ஆண்டுகளாக, அரச துறையில் கடமைபுரிந்துள்ளேன். எனது மனசாட்சிக்கும், நீதிக்கும் பங்கம் ஏற்படாத வகையில் நடந்துள்ளேன். எனது சுயநலத்திற்காக நான் எதனையும் செய்யவில்லை. அப்படியிருந்தும், அரச தரப்பால் அநீதிக்கும், துரோகத்திற்கும் உள்ளாக்கப்பட்டு, உதறியெறியப்பட்டுள்ளேன். எனது கணவர், மகன் உள்ளிட்ட எங்கள் மூவரினதும் உயிரையும் பொதுமக்களே பாதுகாக்க வேண்டும் என, உருக்கமான செய்தியை வெளியிட்டுள்ளார்.

தெரிவுக்குழுவின் தீர்மானங்கள், சட்டத்திற்கு ஏற்புடையதல்ல, செல்லுபடியற்றது என, உயர் நீதிமன்று உறுதிப்படுத்தியுள்ளதால், இலங்கைக் குடியரசின், சட்டப்படியான பிரதம நீதியரசர் நான்தான். இன்று சட்டரீதியான நியாயாதிக்கம் அற்ற நிலையில், பிரதம நீதியரசர் பதவி மட்டுமல்ல, நீதித்துறையின் சுதந்திரத்திற்கே, அரசினால் பங்கம் ஏற்பட்டுள்ளது. நீதித்துறை சுதந்திரம், சட்ட ஆட்சி என்பன, தூக்கியெறியப்பட்டுள்ளன என, ஷிராணி பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 18 வது திருத்தத்தின் பிரகாரம், புதிய நீதியரசருக்கு, பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கவேண்டியது அவசியம். இதனடிப்படையிலேயே, புதிய நீதியரசர் மொஹான் பீரிஸ், ஜனாதிபதி முன்னிலையில், பதவிப்பிரமாணம் செய்துகொண்டதுடன், தமது கடமைகளையும் பொறுப்பேற்றுள்ளார்.

இப்புதிய நீதியசர் நியமனம் தொடர்பாக, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகா, வாசுதேவ நாணயக்கார, மாற்றுக்கொள்கைக்கான நிலையம், ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் போன்ற அமைப்புக்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளதுடன், பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா, கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் போன்றோரும், தங்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு தேசிய, சர்வதேச மட்டத்தில், பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இவ்விவகாரம், இலங்கையின் நீதித்துறைக்கும், சட்டவாக்கத்துறைக்கும், நிறைவேற்று அதிகாரத்துக்குமிடையேயான, முரண்பாடுகளின் அடிப்படையிலேயே தோற்றம் பெற்றதென்றால், அது மிகையில்லை. எனவே நீதித்துறையும், சட்டவாக்கமும், நிறைவேற்று அதிகாரமும், ஒன்றுக்கொன்று முரண்பாடாதவகையில், சமாந்தரமாகப் பயணிக்கும் பட்சத்தில், அது ஆக்கபூர்வமான முடிவுகளை எட்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

# முற்றுப்புள்ளியிடப்பட்ட ஆயுதப்போராட்டம்

திம்பு - டோக்கியோ வரை

சென்றவாரத் தொடர்ச்சி.....



1990 இல் மீண்டும் யுத்தம் வெடித்தது முதல், வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த சுமார் 50 வகையான பொருட்களில், சுமார் 26வகையான பொருட்களுக்கான தடை, இரு வாரங்களினுள் அரசினால் நீக்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கான தடை, இரு வாரங்களினுள் அரசினால் நீக்கப்பட்டது. அத்துடன் மின்சார விநியோகத்தைச் சீராக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

புலிகளின் நிலைகளை நோக்கிய, விமானத் தாக்குதல்களும், எறிகணை வீச்சுக்களும் முற்றாக நிறுத்தப்பட்டன. இதேபோல் புலிகளும் சில நடவடிக்கைகளை எடுத்தனர். ஜுன் 1990முதல் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிசாரில், பத்துப் பேர் விடுவிக்கப்பட்டனர். புலிகளின் இந்தச் செயலை வரவேற்ற பிரதமர் திருமதி சந்திரிக்கா, அபிவிருத்திப் பணிகள், வீதிபுனரமைப்பு,யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கான மின் விநியோகத்தைச் சீராக்குதல் என்பன தொடர்பில், அரசாங்கம் புலிகளுடன் நேரடியாகப் பேச விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் அரசுடனான பேச்சுவார்த்தைக்கு, புலிகள் தரப்பு பிரதிநிதிகளை நியமிக்கும் படியும் கடிதம் மூலம் கேட்டுக் கொண்டார். இந்தச் சமாதான நடவடிக்கைகளை வரவேற்பதாக, 09.09.1994இல் புலிகளின் தலைவர் பிரபாகரன், கடிதம் மூலம் தெரிவித்தார். அத்துடன் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த, புலிகளின் பிரதிநிதிகளாக நான்கு பேரையும் பிரபாகரன் நியமித்தார்.

1994 இன் செப்டம்பர் மாத நடுப்பகுதியில், புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், செய்தி ஊடகமொன்றுக்குப் பேட்டியளித்த போது, பின்வருமாறு குறிப்பிட்டார். ''திருமதி சந்திரிக்கா ஒரு முற்போக்காளர். முன்னைய தலைவர்களைப் போல அல்லாமல், பௌத்த சிங்கள சோவனிச போக்குக்கு எதிராக, கடுமையான விமர்சனங்களை முன்வைப்பவர். அவர் ஒரு சோவனிசவாதி அல்லர். பேச்சுவார்த்தை மூலம், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவே அவர் முற்படுகிறார். அதனால் நாங்களும் அரசியல் பேச்சுவார்த்தைகளில் தீவிரமாக ஈடுபட்டு இருக்கின்றோம்.''

இரண்டு தடவைகள் கடிதங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு ஊடாக, பரிமாற்றப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் அக்டோபர் மாத நடுப்பகுதியில், முதலாவது சுற்று நேரடிப் பேச்சுவார்த்தைக்கு நாள் குறிக்கப்பட்டது. 1994 இன் அக்டோபர் 13, 14ஆம் திகதிகளில், அரசாங்கத்தரப்புத் தூதுக்குழு யாழ்ப்பாணம் சென்று, புலிகளுடன் நேரடிப்பேச்சு நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் 19 செப்டம்பர் 1994 இல், புலிகள் மன்னார் கடலில் வைத்து, கடற்படையினரின் 'சாகரவர்த்தனா' என்ற டோராப் படகை தாக்கியழித்தனர்.

இதன் பிரதம மாலுமியான கப்டன் அஜித் போயாகொட என்பவரைக் கைது செய்தனர். இச்சம்பவத்தில் கடற்படை வீரர்கள் 24 பேர் பலியாகினர். 16 கடற்படையினர் கடலில் இருந்து மீட்கப்பட்டனர். இந்தச் சம்பவம் சமாதான முயற்சிகளை பாதிக்க மாட்டாதென அறிவித்து, அரசாங்கம் திட்டமிட்டபடி தூதுக்குழுவை, யாழ்ப்பாணம் அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அப்போது சிறிலங்கா ஜனாதிபதி பதவிக்கான தேர்தலும் எதிர்நோக்கப்பட்டது. போட்டிக்களத்தில் திருமதி சந்திரிக்கா மிகக் கடுமையான போட்டியை, ஐ.தே.காவின் ஜனாதிபதி வேட்பாளரான, காமினி திசாநாயக்காவிடமிருந்து எதிர்நோக்கி இருந்தார்.

காமினி திசாநாயக்கா, புலிகளுடனான பேச்சுவார்த்தை குறித்து, எச்சரிக்கை கலந்த தொனியிலேயே கருத்துக்களை வெளியிட்டு வந்தார். தமிழ் மக்களுக்கு கௌரவமான தீர்வு கிடைக்க வேண்டுமென வலியுறுத்தியதோடு, புலிகளின் கடந்தகாலம் 'நம்பிக்கைக்கு உரியதல்ல' எனவும் அவர் கூறியிருந்தார். இந்நிலையில் அரசாங்க தரப்புத் தூதுக்குழு, யாழ்ப்பாணம் புறப்படுவதற்கு நான்கு நாட்கள் முன்பாக, அதாவது 09.10.1994 இல், ஓசன் ரேடர் (முஉநயெ வுசயனநச) எனப்படும் இலங்கைக் கடற்படையின் மற்றுமொறு சரக்குக் கப்பல் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

## முதற் சுற்றுப் பேச்சவார்த்தை

1994இன் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்தில், யாழ்ப்பாணக் குடா நாட்டின் வான் பரப்பில் பறந்து திரிந்து, உலங்கு வானூர்திகள் காகித மழையைப் பொழிந்தன. ஆம் பரவலாக துண்டுப் பிரசுரங்களை அள்ளி வீசின. 28 வகையான அன்றாட பாவனைப் பொருட்கள் மீதான தடை, விலக்கப்பட்டிருப்பதாக அவை பறைசாற்றின. நிரந்தர சமாதானம் காணப்பட வேண்டும் என்பதில், அரசாங்கத்திற்கு இதய பூர்வமான அக்கறை இருப்பதாக அவை தெரிவித்தன.

இதன் பின்னர் அக்டோபர் 13, 1994 அன்று காலையில், இலங்கை



விமானப்படையின் உலங்கு வானூர்தியொன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் தரையிறங்கியது. வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுனரும், தகவல்துறை அமைச்சின் செயலாளருமான லயனல் பெர்னாண்டோ, பிரதமரின் செயலாளர் குமச்சிறி பாலபட்டபெந்தி, சட்டதரணியும் இலங்கை வங்கியின் தலைவருமான ராஜன் ஆசீர்வாதம், கட்டடக் கலைஞரான நஜீன் குணரட்ணா ஆகியோர், பிரதமர் திருமதி சந்திரிக்கா தலைமையிலான அரசாங்கத் தரப்பு தூதுக்குழுவினராக வந்து இறங்கினர். இவர்கள் பயணம் செய்த உலங்கு வானூர்திக்கு யாழ். மக்கள் பூமாரி பொழிந்து வரவேற்றனர். சிலர் உணர்ச்சி மேலீட்டால் கட்டியணைத்து முத்தமிடவும் செய்தனர்.

புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தளபதியாகவும், புலிகளின் அரசியற் துறைத் துணைப் பொறுப்பாளராகவும் இருந்த கரிகாலன் தலைமை தாங்கினார். அவருடன் புலிகளின் நிர்வாகத் துறையைச் சேர்ந்த டொமினிக், பொறுண்மிய மேம்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த ரவி ஆகியோரும் பங்குபற்றினர்.

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய, அரசாங்கத் தரப்பு தூதுக்குழுவை, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனும், இன்முகத்துடன் கை கொடுத்து அன்பொழுக வரவேற்றனர். யாழ்ப்பாண நகரின் சுண்டுக்குளிப் பிரதேசத்திலிருந்து, புலிகளின் அரசியற் துறை அலுவலகத்திற்கு, அரச தரப்பு தூதுக் குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு புலிப் போராளிகளின் அணிவகுப்பு மரியாதையும், அரசாங்கத் தரப்புக் குழுவிற்கு வழங்கப்பட்டது.

இப்பேச்சுக்களில், போர் சூழல் நிலவிய பிரதேசத்தில் வாழும் மக்கள், எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்தே முதலில் கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதாரத்தடை காரணமாக, மக்கள் எதிர்நோக்கிய கஷ்டங்கள் விபரிக்கப்பட்டது. போரினால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்த, சமூக உட்கட்டமைப்புக்களை மீளக் கட்டியெழுப்புவது, அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது. உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களின் மீளக் குடியமர்வு குறித்தும் பேசப்பட்டது. யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கும், வன்னிப் பெரு நிலபரப்புக்கும் இடையில், பாதுகாப்பான போக்குவரத்துப் பாதையொன்றைப் பொது மக்களுக்காகத் திறப்பது குறித்து இங்கு விவாதிக்கப்பட்டது.

அப்போது ஆணையிரவு பிரதேசத்திலும் பூநகரி பிரதேசத்திலும் படை முகாம்கள் இருந்தன. ஆனையிறவுக்கு ஊடான, பொது மக்களின் போக்குவரத்தை, புலிகள் அனும்திக்கவில்லை. இதற்குப் பதிலாக இயக்கச்சியிலிருந்து கொம்படி ஊடாக, கண்டாவளை சென்று அங்கிருந்து கிளிநொச்சிக்கு செல்லும் பாதையை, முதலில் புலிகள் தாக்குதலை முறியடித்த, ஒப்பரேசன் பலவேக நடவடிக்கையை அடுத்து இப்பாதை மூடப்பட்டது. இதனையடுத்து கிளாலி கடல் நீரேரிக்கு ஊடான, படகுப் போக்குவரத்துப் பாதையொன்றை புலிகள் திறந்தனர். ஆனால், இப்பாதையைச் சட்ட விரோதமானது எனப்பிரகடனம் செய்தது அரசாங்கம். இதனால் கடல் நீரேரியின் ஊடான பயணத்தில் ஈடுபட்ட படகுகள் பலவும், படையினரின் தாக்குதலுக்கு இலக்காவது தொடர்ந்து கொண்டிருந்தது. கிளாலிக்கு ஊடான பயணம் உயிராபத்து மிக்கதாக இருந்தது.

இந்த நிலையில் பொது மக்களின் போக்குவரத்திற்கு, ஆணையிரவு ஊடான பாதையை பயன்படுத்தலாம் என அரசாங்கம் நினைத்தது. ஆனால், இதற்கு பதிலாக பூநகரி ஊடான பாதை, நிறக்கப்பட வேண்டும் எனவும், இதற்காக பூநகரி படைமுகாம் அகற்றப்பட வேண்டும் எனவும், புலிகள் வலியுறுத்தினர்.

யாழ்ப்பாண நகரத்திலிருந்து கேரதீவு வரை மட்டுமே, தொடர்ச்சியான தரைப்பாதை இருந்தது. கேரதீவு முதல் சங்குப்பிட்டி வரை, கடல் மார்க்கப் பயணமும், பின்பு சங்குப் பிட்டியிலிருந்து, தொடர்ச்சியான தரைப்பாதையும் இருக்கிறது. அதாவது, ஒப்பீட்டளவில் பார்த்தால்,

தொடரும்...

—இரணியன்—

சென்றவாரத்தொடர்ச்சி....



2. எந்தவிதமான தாமதமுமின்றி, இறந்தவர்கள் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்கள், அடையாளம் காணப்படவேண்டும்.

3. தற்போது தடுப்பில் வைக்கப் பட்டிருக்கும், முள்ளிவாய்க்காலில் தப்பிப்பிழைத்த அனைவரும், மனிதா பிமான அடிப்படையில் உடனடியாக

இரண்டாவது தெரிவினைத் தேரந்தெடுத்தார். எதனைப் பற்றியும் அலட்டிக்கொள்ளாது, அமைதியாக இருத்தல் என்ற, பான் கீ மூனினது முடிவு சிறிலங்கா அரசாங்கத்தினைத் திருப்திப்படுத்தியதோடு, வழமை போலவே இவர்கள் தங்களது நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு வழிசெய்து கொடுத்தது.

நான் எதனையும் பார்க்கவுமில்லை, எதுபற்றியும் கேட்கவுமில்லை என்ற எண்ணத்தில் பான் கீ மூன் செயற்பட்டார் என்பது வேதனை தரும் சந்தர்ப்பமாகும்.

பாதுகாப்புச் சபையானது, சிறிலங்காவினது விடயத்தில் தலையீட்டினை மேற்கொள்வதில், ஆர்வம் காட்டவில்லை. அல்லது விருப்பம் காட்டவில்லை என வாதிடப்பட்டது. இது எழக்கூடிய குற்றச்சாட்டிலிருந்து பான் கீ மூனைக் காத்தது. சிறிலங்கா மீது பலத்துடன் கூடிய தலையீட்டினை மேற்கொள்வதற்கு, அரசியல்வாதிகள் பலரும் தயக்கம் காட்டினர் என ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஆனால் ஐ.நாவின் ஒரு செயலா-

எடுக்கக்கூடிய வகையிலான, பொதுமக்கள் விழிப்புணர்வினையும் ஏற்படுத்தியிருந்தது எனலாம்.

ஐ.நா முறையான தலையீட்டினை மேற்கொள்ளவேண்டும் என பான் கீ மூன் உறுதியுடன் வலியுறுத்தியிருந்தால், விசாரணைகள் இடம்பெறவேண்டும் என வலியுறுத்துவதன் ஊடாக பொதுமக்கள் கொல்லப்படுவதைப் பார்த்துக்கொண்டிருந்த, பாதுகாப்பு சபையில் அங்கம் வகித்த இதர நாடுகளுடன், பான் கீ மூன் முட்டி மோதியிருப்பார்.

இவ்வாறு பான் கீ மூன் நடந்திருந்தால், அவர் தனது கையினை சுத்தம் செய்திருப்பார். எவ்வாறி ருப்பினும் அரசியல் மற்றும் இதர காரணங்களுக்காக, பான் கீ மூன் இவ்வாறு நடந்துகொள்ளாமல் நரசிம்ம அவதாரம் எடுத்திருந்தார்.

சிறிலங்கா அரசு மற்றும் விடு தலைப் புலிகளின் உபாயங்கள், எந்தளவிற்கு மோசமாக இருந்தபோதிலும், இதுபோல பெருமெடுப்பிலமைந்த மனிதப் படு-



வேண்டிய தேவை, எதுவுமில்லை என சிறிலங்கா அரசாங்கம் கூறிவரு கிறது. நாட்டில் புரையோடிப்போயிருந்த பயங்கரவாதத்தினை, நாங்கள் இல்லாதொழித்திருக்கிறோம். அவ்வளவும்தான் என்கிறார்கள் இவர்கள்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள்

# மூன்றரை ஆண்டுகள் நிறைவில் முள்ளிவாய்க்கால் ஐ.நாவின் நாடகம் இன்னும் தொடர்கிறது...

விடுவிக்கப்படவேண்டும்.

இதுதான் இன்றைய நிலைமை. போர் முடிவுக்கு வந்து மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், நாங்கள் ஒரே கோரிக்கையையே இன்னமும் முன்வைக்கிறோம்.

முள்ளிவாய்க்காலில், தங்க ளது உறவுகளைப் பறிகொடுத்த, குடும்பங்களைப் பொறுத்தவரையில், இந்தத் துயரத்திலிருந்து அவர்கள் சற்று மீண்டிருக்கின்றபோதும், அவர்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. இடம்பெற்ற இந்தப் பெருந்துயரத்தினை இவர்கள் மறப்பதற்கு, இது போதுமானதாக இல்லை. தாங்கள்தான் படுகொலையினைப் புரிந்தோம் என, இவர்கள் கூறி அதற்கான பரிகாரத்தினை மேற்கொண்டாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருபோதும் நீதி கிட்டப்போவதில்லை. ஏனெனில் இறந்தவர்களை உயிருடன் மீண்டும், மீளக்கொண்டுவர முடியாது.

இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர், அரசியலை விடுத்து, தங்களது பதவியினைவிடுத்து, பிழை களைச் சுட்டிக்காட்டி, மனிதாபி மானம் தொடர்பாகச் சிந்திக்கக்கூடிய, முதன்மையான அரசியல் தலைவர்கள் எவருமே இன்று சிறிலங்காவில் இல்லை என்பது மிகவும் வேதனைக்குரிய விடயம். அவ்வாறு இருந்திருக்குமேயானால், ஒரே இலங்கை தேசத்தில், ஒரு இனம் மகிழ்ச்சியுடன் வாழ, இன்னுமோர் இனம் துன்பத்தில் உழல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காதல்லவா?

## செயலாளர் நாயகம்.

ஐ.நாவின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் செயலாளர் நாயகம் பொறுப்புடையவரல்ல. அல்லது பாதுகாப்பு சபையினரால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங் களுக்கு, செயலாளர் நாயகம் பொறுப்பாக மாட்டார். எவ்வாறிருப்பினும், பான் கீ மூன் தானே மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு, அவர்தான் பொறுப்பு. 2009 ஆம் ஆண்டினது, மோசமான இந்த நாட்களில், பான் கீ மூனுக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன. அரசியல்வாதிகளை வெட்கித் தலைகுனியவைக்கும் வகையில், ஐ.நா பாதுகாப்பு சபையினை எதிர்த்து நிற்பது, அல்லது தலையினைக் கீழே கவிழ்ந்தவாறு, என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது, என்பது போலப் பாசாங்கு செய்வது.

இங்கு பான் கீ மூன்,



ளர் நாயகம், குரல்கொடுக்கவேண்டும் என, நாம் விரும்பும் மிகவும் முதன்மையான தருணம் இதுவல்லவா? அல்லது வேறு வகையில் கூறுவதானால், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதில், உலக நாடுகளின் அரசியல் தலைவர்கள், தலையீடுகளை மேற்கொள்ள முடியும், எனும் நிலைப்பாடு இருக்குமாயின், ஐ.நாவுக்கான செயலாளர் நாயகம் என்ற பதவி நிலை, எமக்கு ஏன் தேவைப்படுகிறது என்பது, ஈழத்தமிழர்களுக்கு இன்னும் விளங்காத விடயமாகவே இருக்கின்றது.

தொடரான இந்தப் படுகொலை முடிவுறும் தறுவாயில் இருந்தவேளையில், பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகியன மேற்கொண்ட



தலையீடுகள், அனைத்துலக சமூகம் விரைந்து நடவடிக்கையினை

கொலை, இடம்பெற்றமைக்கான பொறுப்பில், அந்த இரு சாராரையும் விடப் பெரும்பகுதியை ஐ. நாவே தனது தோள்களில் தாங்க வேண்டும்.

தவறுகள், தவறான முடிவுகள் மற்றும் சிறிலங்காவினைச் சரியாக எடைபோடத் தவறியமை ஆகியவற்றுடன் ஊடாக, முள்ளிவாய்க்காலில் பெருந்தொகையில் தமிழ் உயிர்கள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்கு ஐ.நா தவறிவிட்டது.

ஐ.நாவின் உறுப்பு நாடு களின் மீதும் இந்தக் குற்றச்சாட்டுப் பகிரப்படவேண்டும்.

போரின் இறுதி நாட்களில், இறுதி மணித் துளிகளில், களமுனையில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைக் கண்காணிக்கும் திறன், இந்தியா மற்றும் அமெரிக்கப் புலனாய்வாளர்களிடம் இருந்தபோதும், அனைத்துலகம் விநோ தமான முறையில், முழுமையான அமைதியினைக் கடைப்பிடித்து, விபரிக்கவே முடியாத கொடுமை களுடனும், இழப்புக்களுடனும், காயாத வடுக்களுடனும் முள்ளிவாய்க்கால் இருட்டாகவே முற்றுப்பெற்றுவிட்டது.

## முள்ளிவாய்க்கால் நீதிக்கானதொரு அழைப்பு.

இந்த விடயம் தொடர்பாக விபரிக்கவோ அன்றி, வாதிடவோ

படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சரியாகத் தெரியாத அளவுடைய கைதிகள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இது விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டியதொரு விடயம் இல்லையென சிறிலங்கா அரசு கூறுகின்றது.

போரின் இறுதி நாட்களில் இடம்பெற்றது எதுவோ, அவை தொடர்பாக, முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக், காத்திரமான அனைத்துலக அழுத்தங்கள் முன்வைக்கப்படுகின்றபோதும், இந்த விடயம் தொடர்பாக விசாரணை நடக்கவேண்டிய தேவை, எதுவுமில்லை என்றே சிறிலங்கா அரசாங்கம் வாதிடு கிறது.

அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிட்டதே, இனியேன் விசார-ணை எனச் சிறிலங்கா அரசாங்கம் கேள்வி எழுப்புகிறது. எவ்வாறிருப்பினும் தமிழர்களைப் பொறுத்தவரையில், முள்ளிவாய்க்கால் என்பது, வெறுமனே ஒரு இடத்தினது பெயரன்று, மாறாக ஈழத்தமிழர்கள் சந்தித்த பெரும் பயங்கரத்தினைக் குறிக்கும் சொல்லிது. அப்பாவித் தமிழ் பொதுமக்கள், கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டதைக் குறிக்கும் சொல்தான் முள்ளிவாய்க்கால். பொய்களை அடிப்படையாக் கொண்டு, கட்டப்பட்டதே முள்ளிவாய்க்கால் என்ற இந்தக் கதை?

சிறிலங்கா தொடர்பாக, இதற்கு முன்னர் எவ்வகையிலும் தொடர்புபடாத, திறன்பொருந்தியவர்களைக் கொண்ட வல்லுநர்கள் குழு. சிறிலங்காவில் இடம்பெற்றது எதுவோ, அதற்கு முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். என அழைப்பு விடுத்திருக்கிறார்கள். தன்னிடம் எந்தக் குற்றமுமில்லை எனச் சிறிலங்கா கருதினால், போரின் இறுதிநாட்களில் இடம்பெற்றது எதுவோ, அதனை அனைத்துலக ரீதியில் விசாரணை செய்வதற்கு அரசு அனுமதிக்க வேண்டும், ஆனால் சிறிலங்கா அரசு அதைச் செய்வதற்கு தயாராக இருக்கின்றதா?

இதைக் கோடிட்டுக் காட்டவேண்டியது உலக நீதிவான் பான் கீ மூன் தான். இது தொடர்பில் அவர் காய்களை நகர்த்துவாரா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

முற்றும்

– நெற்றிப்பொறியன் –

# மாணவர் புரட்சி – விடுதலையை வென்றெடுக்கும் தந்திரங்களும் தோற்கடிக்கும் சூத்திரங்களும்.



யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு ஒரு மாதம் கடந்தும் விடுதலை செய்யப்படவில்லை என்று வானொலியில் வாசிக்கப்பட்ட செய்தியைக் கேட்டது முதல் மனம் உள்ளுக்குள் குமுறத் தொடங்கியது. அதுவே இப்பத்தியின் ஆரம்பமாயும் ஒரு விடயத்தை பகிரங்கமாக இச்சந்தர்ப்பத்தில் சொல்லிவிடவும் வழிகோலியது. ஒரு போராடும் இனத்தில் புரட்சியின் வித்துக்கள் மட்டுமே கருவறையிலும் பள்ளிக்கூட அறைகளிலும் என எல்லா நிலைகளிலும் இருக்கவல்லன. பள்ளிக்கூட அறைகளில் மட்டுமே அது துளிர்விட ஏதுவான சாதகச்சூழல் நிரம்பிக் காணப்படுகிறது.

என்னைப் பொறுத்தவரையில் யாழ் பல்கழைக்கழகத்தில் அன்றைய தினம் நடந்தது தான் புரட்சியின் ஆன்மா என்று அறிந்துகொள்ளக்கூட அவகாசம் கொடுக்கப்படாமல் தோன்றியவுடன் அடக்கப்பட்ட ஒரு புரட்சியே பல போராட்டங்கள் தோற்றுப்போகக் காரணம் புரட்சியைத் தக்கவைக்க முடியாமையும் புரட்சி தொடரத் தேவையான புறச்சூழல் இல்லாது போதலுமே ஆகும்.

விடுதலையை வென்றெடுக்கும் தந்திரம் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும் சமூகமாக தமிழ்ச்சமூகம் உள்ள சூழலில் ஆணையிடுதலின்றி வெளித்தோன்றிய யாழ் பல்கலைக்கழகப் புரட்சியின் பெறுமதி போராடுபவர்களிலும் பார்க்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு நன்கு புரிந்திருக்கிறது என்பதையே களநிலவரம் கைகாட்டி நிற்கிறது.

அதனாலேயே எத்தகைய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் மாணவர்கள் புனர்வாழ்வின் பின்னரே விடுவிக்கப்படுவார்கள் என்று அடித்துக்கூற தலைப்பட்டுள்ளது இலங்கை அரசு.ஈழத்தமிழர்களின் விடுதலை என்பது இன்றைய நிலையில் எதிர்த்தல் அனுசரித்தல் என்ற மூலக்கூறுகளால் உருவாக்கப்படவேண்டிய ஒரு மூலகமாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில், அனுசரித்தல் மூலம் வளருதல் அனுசரித்தல் மூலம் அழிந்துபோதல்எதிர்த்தல் மூலம் வளருதல்எதிர்த்தல் மூலம் அழிந்துபோதல் என்ற நான்கு நெருப்பாறுகளிலும் நீந்திக்கடக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழினம் உள்ளதை யாரும் மறுத்துவிட முடியாது. அனுசரித்தல் என்ற மூலக்கூறு பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

ஆனால் எதிர்த்தல் என்ற மூலக்கூறு பற்றி அவசரமாகவும் அவசியமாகவும் பேச வேண்டிய தேவை நிறையவே உள்ளது. எதிர்த்தல் என்ற போர்க்குணத்தின் தூய விதைகளாக அன்று இன்று ஏன் என்றும் இருப்பவர்கள் மாணவர் சமூகத்தினரே.

உருவாகிய ஒரு புரட்சி எவ்வாறு கைநழுவி கையறு நிலைக்குப் போனது எனவும் எங்கும் எப்போதும் உருவாகலாம் என நீறுபூத்த நிலையில் இருக்கும் மாணவர் புரட்சியை அல்லது புரட்சிகளை பாதுகாத்துப் பலன்பெற மேற்கொள்ளவேண்டிய முன்னேற்பாடுகள் குறித்தும் அதனை அழிக்க எதிர்த்தரப்புகள் கையாளும் உத்திகளையும் பற்றிச் சிந்திக்கவும் ஆரோக்கியமாக விவாதிக்கவும் வைப்பதே இப்பத்தியின் ஒரே நோக்கமாகும்.

மாறாக யார்மீதும் குறை கூறுவதோ குற்றம் சுமத்துவதோ இப்பத்தியின் நோக்கமல்ல என்பதை திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். இன்றைய நிலையில் எதிர்த்தல் மூலம் அழிந்துபோதல் என்பதை தமிழர்களின் எல்லாத் தலைமுறையினருக்கும் உணர்த்திவிட ஆக்கிரமிப்பாளர்கள் என்ன விலைகொடுக்கவும் என்ன பொய் சொல்லவும் தயாராய் இருக்கிறார்கள். அதற்காகவே நிறைய ஏமாற்றும் தந்திரங்களை கையாள்வதோடு பல சமூக புதிய புதிய தலைவர்களையும் பொய்மைப் பிரபுக்களையும் தயாரித்து மேடையேற்றி வருகிறார்கள்.

ஆனால் எதிர்த்தல் மூலம் வளருதல் என்ற கோட்பாட்டில் குறிப்பிட்டளவு முன்னேறாதுவிட்டால் விடுதலை என்பது கேள்விக்குறியாகிவிடும். ஆபத்தில் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது மிக மிக அவசியம். அதுவே ஒரு விடுதலைக்குத் தேவையான உளவியல் சத்தினை போராடும் இனத்திற்கு வழங்கவல்லது. குழப்பமான நிலையில் விடப்பட்டிருக்கும் ஒரு சமூகத்தில் விடுதலை பற்றிப் பேசுவதும் எதிர்த்தல் மூலம் முன்னேறுவதுமென்பதே எல்லாவற்றையும் விடச் சவாலான பணி. அதிக விமர்சனங்களிற்கு உள்ளாகக்கூடியது.

நீண்ட நெடிய விடுதலைப் பயணத்திற்கு அதிக வலுச் சேர்க்கவல்லதும் அதுவேதான். இவ்வாறு பேசும் போது எதிர்த்தல் மூலம் முன்னேற புலம்பெயர் தேசங்கள் உட்பட தமிழர் வாழும் நாடுகளில் பல ஜனநாயக அமைப்புக்கள் இருக்கின்றன தானே என்ற எண்ணம் உங்களுக்கு எழலாம். ஆனால் அங்கேதான் நாம் கவனிக்க வேண்டிய சில விடயங்களும் இருக்கின்றன.

ஒவ்வொரு அமைப்புகளிற்கும் ஒவ்வொரு பின்புலம் உண்டு. அவர்கள் மீது தமிழ் மக்களிற்கும் பிறமக்களிற்கும் ஒவ்வொருவிதமான பார்வைகளும் அபிப்பிராயங்களும் உண்டு. அத்துடன் எதிர்த்தல் மூலம் வளருதல் என்பதனை எதிர்த்தல் என்ற வரையறைக்குள் மட்டும் வைத்து வளரவிடாமல் பின்னப்பட்ட சூழ்ச்சிகளும் கவனயீனங்களும், பலவீனங்களும் ஆங்காங்கு நிறையவே உண்டு.

சுருக்கமாக எளிய உதாரணத்துடன் சொல்வதானால் யாரால் அந்த பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுவிக்கச்செய்து அந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட வைத்திருக்க முடியுமோ அவர்களால் மட்டுமே எதிர்த்தல் மூலம் வளருதல் என்ற ஒரு இனவிடுதலையின் சரிபாதி பங்கையும் வலுநிலை வளர் அரசியலையும் செழுமையாகச் செய்யமுடியும்.

இருக்கின்ற அமைப்புக்களையே யானையைக் கட்டித் தீனி போடும் நிலைபோல் மக்கள் பார்க்கும் போது இன்னுமொரு அமைப்பா என ஆச்சரியப்படவும் கோபப்படவும் இச்சந்தர்ப்பத்தில் இடமுண்டு. ஆனால் அதையும் தாண்டி சொல்லியே ஆகவேண்டிய விடயம் ஒன்று உள்ளது. அது தவிர்க்கப்பட முடியாததும் கூட. நிறைய கேள்விகளிற்கும் குழப்ப நிலைகளிற்கும் பதில் தரும் வல்லமையும் அதற்கே உண்டு.

எதிர்த்தல் மூலம் முன்னேற மாணவர் சமூகமே மிகப்பொருத்தமானவர்கள் என்று பத்தியின் முற்பகுதியிலேயே குறிப்பிட்டு விட்டேன். இப்போது கோத்தபாயவை விடவோ இலங்கை இராணுவத்தளபதியை விடவோ நாம் அறுதியாகக் கூறமுடியும் மாணவர்கள் புனர்வாழ்வின் பின்னரே அதுவும் அவர்களின் நிகழ்ச்சி நிரலின் படியே நிபந்தனைகள் நிரப்பப்பட்டே விடுவிக்கப்படுவார்கள் என்று. புனர்வாழ்வின் பின்னரே விடுதலை செய்யப்படுவார்கள் என்பதில் உறுதியாகவும் அதனைப் பலமாகப் பிரச்சாரப்படுத்தவும் இலங்கை அரசு தீவிரம் காட்டுவதில் தான் பெறுமதியும் சூட்சுமமும் அடங்கியுள்ளது.

இலங்கை அரசைப்



பொறுத்தவரையில் புனர்வாழ்வு என்பது பயங்கரவாதிகளிற்கானது. மாணவர்களிடம் வாக்குமூலம் பெறுவதும் அவர்களை விடுதலைப்புலி உறுப்பினர்களுடன் தொடர்புபடுத்துவதும் அதற்காகவே.

அத்துடன் இன்று இலங்கை அரசின் விசுவாசத்திற்கு உரியவர்கள் 1989இல் சீனப் பொதுவுடமைக் கட்சியின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை எதிர்த்து தலைநகர் பீஜிங்கில் உள்ள தியமென் சதுக்கத்தில் திரண்டு போராடிய நிராயுதபாணி மாணவர்களை ராங்கிகளால் நசித்து கொடூரமாகக் கொன்று மாணவர் புரட்சியை அடக்கியது சீன அரசு. இப்போது விடயத்திற்கு வருவோம். ஆம் மாணவர்கள் புலம்பெயர் எந்த அமைப்பினதும் அங்கத்தவர்களாகவோ அல்லது தமிழ்நாட்டு மற்றும் பிறநாடுகளின் ஈழ ஆதரவு தமிழ் அமைப்புக்களின் அங்கத்தவர்களாகவோ இருந்துவிட இலங்கையில் இடமில்லை.

ஆனால் அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். ஆனால் யாராலும் அவர்களை உடனடியாக வெளிக்கொண்டு வரவோ அவர்களின் அன்றாடச் செயற்பாடுகளுக்கு சக்தி பெருக்கவோ முடியவில்லை. காரணம் இலங்கையின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பலமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சர்வதேச அமைப்பொன்றின் அங்கத்துவர்களாக அவர்கள் இல்லை என்பதுதான்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒரு சுயாதீன சர்வதேச மாணவர் அமைப்பு ஒன்றுக்கான அவசியமும், அவசரமும் இச்சந்தர்ப்பத்தில் தேவைப்படுகின்றது. அதுபற்றி ஒவ்வொரு தமிழனும், தமிழ் அமைப்புக்களும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். அதில் உலகெங்கும் வாழும் தமிழ் மாணவர்கள் உட்பட சர்வதேச பல்கலைக்கழக கல்லூரிகளின் ஆசிரியர்களும், பேராசிரியர்களும் அங்கத்தவர்களாக இருக்கவேண்டும்.

சகல தமிழ் மற்றும் பிற அமைப்புக்களும் அவர்களிற்கு ஆதரவினை வழங்கமுடியும். மாணவர்கள் புரட்சியை கையில் எடுத்தால் எப்போதுமே தோற்றதில்லை. உலகின் மிக அதிக புரட்சிகளை வெற்றி பெற வைத்ததும் அவர்கள்தான் என்பது வரலாற்றுப் பாடம்.

இல்லையெனில் தொடர்ந்து பலநூறு மாணவர்களும், மாணவிகளும் கைதுசெய்யவும் காணாமல் போகவும் செய்யப்படுவார்கள். அவர்களைக் கைது செய்யவும், குற்றம் சுமத்தவும் போதுமான காரணங்கள் அவர்களைச் சுற்றி திட்டமிட்டு உருவாக்கப்படும். புள்ளி விபரங்களுடனும், சான்றுகளுடனும் சர்வதேசத்தின் முன் தீவிரவாதிகளாகக் காட்டப்படுவார்கள். புனர்வாழ்வுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இதை ஒரு நடைமுறையாக்கி போராடும் உளவியலை மாற்றியமைப்பார்கள். ஒரு மனித வாழ்வின் அடிப்படை உரிமைகளுக்காக குரல்கொடுக்க முடியாத துயரமான இருளான சூழலை உருவாக்குவார்கள். சர்வதேச மனிதாபிமான போரியல் சட்டங்கள் இருந்தும் பல விடுதலைப் போராளிகளை இன்னும் சிறையில் வாடவைத்திருப்பதும் சாகடிப்பதையும் போல மாணவர்களையும் சிறையில் வைத்து தினம் தினம் சாகடிப்பார்கள்.

எதிர்த்தல் மூலம் முன்னேறுதல் என்ற கோட்பாட்டில் தோல்வியடையச் செய்வார்கள். நாங்கள் அவற்றைக் கண்டித்தோம், எதிர்த்தோம், திரண்டோம் என சிறிய செய்திகளைக்கூட பொிதாகப் போட்டுவிட்டு செய்வதறியாது தவிப்போம்.ஒரு புறம் நுண் இன அழிப்பை திட்டமிட்டு மேற்கொண்டு நாளை நாட்டில் தமிழ் மாணவர்களே உருவாகமுடியாத சூழலை படிப்படியாக உருவாக்கிக்கொண்டு மறுபுறம் மாணவர்கள் படிக்க வந்தால் பாடத்தில் மட்டும் கவனம் செலுத்தி பட்டத்தைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட வேண்டும் என போதனைகளும் ஆலோசனைகளும் இன்னொரு புறத்திலிருந்து வழங்குவார்கள். இது கண்களைப் பிடுங்கி எடுத்துவிட்டு பாருங்கள் என்று சொல்வதற்கு ஒப்பாய் அமையும்.


அத்துடன் புரட்சி பற்றிய பெரும் கற்பனைகளில் மட்டும் மிதந்து புரட்சியின் அடிநாதமான ஆன்மாவை அழித்துவிடாது புரட்சி பற்றிய கால நிர்ணயத்திற்கு கணக்கெழுதி காலத்தை வீணடித்துவிடாமல் அதற்கான புறச்சூழலை உருவாக்குவதிலும் மாணவர்களைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துதல் என்பது ஒவ்வொருவர் முன்னிலையிலும் உள்ள கடமையாகும்.

உலகின் பெரும் புரட்சியாளன் லெனின் கூறியது போல புரட்சி பற்றிய அனுபவம் எழுதத் தகுந்ததல்ல அனுபவிக்கத்தகுந்தது என்பதற்கு அமைய அதனை அனுபவிக்க போர்க்குணத்தின் வித்துக்கள் எம்மிடம் நிறையவே உள்ளன.

நாம் சரியான புறச்சூழலை உருவாக்கினால் மட்டும் போதும். யாரினதும் ஆணையிடுதல் இல்லாமல் இன அழிப்பின் படிமுறைச் செயற்பாடுகளால் தானாக வெளித்தோன்றி வலு நிலை அரசியல் வடிவம் பெறும். கனமான கனவினை வென்று தரும். சிந்திப்போம் செயற்படுவோம்.

இரணியன்.

# தீர்க்க தரிசி தந்தை செல்வாவின் தலைமைப்பேருரை...



தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட இன்றைய அரசியற்றிட்டம், நடைமுறைக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குமேற் சிறிது காலந்தான் ஆகிறது. இதற்கிடையில், அரசாங்கமோ - இங்கே எடுத்துச் சொல்ல முடியாத தொகையினவாய் நமக்குப் பாதகமான சட்டங்களை ஒன்றன்மேல்லொன்றாய் நிறைவேற்றியும், பரிபாலனத் துறையில் நம்மைப் பாதிக்கக் கூடிய, கருமங்களை ஆற்றியும் கொண்டுவருகின்றது.

தெளிவாகப் புலப்படுகின்ற சில உதாரணங்களை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்டினாற் போதுமென்று கருதுகின்றேன், இலங்கைவாழ் தமிழபேசும் மக்களில், அரைப்பங்கினரைப் பிராஜாவுரிமை யற்றோராகச் செய்யும் ஒரே நோக்குடன், அரசாங்கம் பிரஜாவுரிமைச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றது.

அந்நியர்களுக்கு எதிராகவே இச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவென்று வெளிக்குக் கூறிக்கொள்கின்றனர். இது ஒரு போலி நியாயமாகும். இலங்கையின் மத்திய பாகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும். ஏழு லட்சம் தமிழ்த் தொழிலாளர்களுடைய பிரஜாவுரிமையைப் பறிப்பதே, இச்சட்டங்களின் உண்மை நோக்கமாகும்.

இவர்களுள்ளே பெரும்பாலானோர் வேறு நாட்டையே அறியமாட்டார்கள், அவர்களெல்லோரும் இந்தியர்களல்லர்: இலங்கையர்களே, தமிழ் பேசும் மக்களாக இருப்பதே அவர்களுடைய ஒரே ஒரு குற்றம். அரசியல் அதிகாரம் எண்ணுந் தொகையினையே பொறுத்திருக்கின்றது. இந்த மழைநாட்டுத் தமிழர்களைச் சேர்த்து எண்ணினாலும், இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள், அரசியலதிகாரம் அற்றவர்களாக இருக்கின்றார்கள்.

இவர்களுள் மலைநாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மக்களை நீக்கிவிட்டால், எஞ்சியிருக்கும் தமிழ் பேசும் மக்கள், தொகையில் மிகவும் குறைந்த, அரசியல் அநாதைகளாய் விடுவார்கள் இதுதான் இலங்கைத் தலைவர்கள் எண்ணியிருந்த விடயம் இது போதாதென்று, இந்த மலைநாட்டுத் தமிழ்த் தொழிலார்களின், வாக்குரிமையைப் பரிப்பதற்குச் சட்டமும் இயற்றிவிட்டார்கள். இது கொடுமையிற் கொடுமையாகும்.

அரசாங்கத்தின் நோக்கம், இந்நாட்டில் வசிப்பதற்குப் பூரண உரிமையுடைய இம்மக்களை இந்நாட்டைவிட்டுத் துரத்துவது: அல்லது அவர்களைப் பலவந்தமாகத் துரத்துவது: அல்லது அவர்களைப் பலவந்தமாகச் சிங்களம் பேசும் மக்களாக மாற்றுவது வாக்குறிமையற்ற அரசியல் அநாதையாக்கி விடுவது என்பது எவருக்கும் எளிதிற்புலனாகும்.

தேசியக்கொடி விஷயத்தில் அரசாங்கம் நடந்து கொண்ட விதம், தமிழ்பேசும் மக்களுடைய உணர்ச்சிகளையும் உரிமைகளையும் உதாசீனம் செய்வதாக இருக்கின்றது. சிங்கக்கொடி - சிங்கள மன்னிரின் கொடியேயாகும். இன்று, அது சிங்களவருடைய அதிகாரத்தின் சின்னமாக விளங்குகின்றது. அந்தக் கொடியே நடைமுறையில் இலங்கையின் தேசியக் கொடி எனக் கொள்ளப்படுகின்றது. பல்வேறு இனங்கள் வாழும் இந்த நாட்டின் தேசியக்கொடியாக, ஒரு இனத்தவரின் கொடியைக் கொண்ட நாடு வேறு எதுவும் உலகிலில்லை.

தேசியக் கொடி விஷயத்தில் அரசாங்கத்தின் கொள்கை,தமிழ் பேசும் மக்களிடம் அவர்கள் நடந்துகொள்ளும் முறைக்கு ஒருஎடுத்துக்காட்டாக இருக்கின்றது. அரசாங்கம், அவர்கள் இங்கு வசிப்பதைச் சகித்துக் கொண்டிருக்கின்றது; அவ்வளவுதான்.

அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையானது, இவையெல்லாவற்றிலும் பார்க்கத் தமிழ்பேசும் மக்களுக்குக் கூடிய ஆபத்து விளைவிக்கக் கூடியதாய் இருக்கின்றது. இக்கொள்கையின் ஆரம்பத்தைத்தான் கல்லோயாவிற் காண்கின்றோம். கல்லோயாத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாச்சப்படும் பிரதேசம், தமிழ் பேசும் பகுதியாகிய கிழக்கு மாகாணமேயாகும். தமிழ்பேசும் இப்பிரதேசத்தைக் குறைப்பதற்கே அரசாங்கம் அநீதியான முறையில் தன் அதிகாரத்தை உபயோகிக்கின்றதென்பது தெளிவு, தடுப்பாரின்றி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், சில வருடங்களுக்கிடையில் இந்நாட்டிலே தமிழ்ப்பிரதேசமே இல்லா தொழியும்.

நிதி மந்திரியவர்கள் விளக்கியபடி, அரசியல் மொழி விஷயத்திலே தமிழ்பேசும் மாகாணங்களைப் பரிபாலன முறையிற் பிரித்து விடுவதும்; மற்றைய ஏழு மாகாணங்களிலும் சிங்களத்தையே அரசாங்க மொழியாகச் செய்வதும்தான் அரசாங்கத்தின் கொள்கையாகும். இவ்வேழு மாகாணங்களிலே, குறைந்தது இரண்டு மாகாணங்களிலாவது, தமிழர்கள் செறிந்து பெரும்பான்மையோராக வாழும் பிரதேசங்கள் இருக்கின்றன. இவர்களிடம் அரசாங்கம் நீதியாக நடந்து கொள்ள விரும்பினால், அவர்களுடைய பிரதேசத்தின் பரிபாலன விஷயங்களில் அவர்களுடைய மொழியையே உபயோகிகக்க வேண்டும்.

ஆனால், இது நடைபெறப்போவதில்லை. இப்படியான செயல்களினால் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களை ஆளுவதற்கு, இன்றைய அரசாங்கம் தர்ம நீதிப்படி அருகதையற்றதாகிவிட்டது. அவர்கள் அப்படி ஆளுவதற்கு அதிகார வலிமையொன்றே உரிமையளிக்கின்றது. இரண்டேயிரண்டு வருடச்சுயாட்சியில், தமது சொந்த நாட்டிலேயே இவ்வளவு கீழ்நிலையடைந்து விட்டார்கள்!

இன்றைய அரசாங்கம் தங்களுடையதென்று தமிழ்பேசும் மக்கள் கருதவில்லை, இந்தச் சூழ்நிலையில் யாம் செய்யவேண்டுவதென்ன? நடந்தது நடக்கட்டுமென்று வாளாதிருப்பதா? அவ்விதம் இருத்தல் நமக்கோ-நமது நாட்டுக்கோ நன்றன்று, நாம் ஆண்மையுடன் முயன்று இப்பிரச்சினையைத்தீர்க்க ஒரு வழி காணுதல் வேண்டும். அவ்வழிதானென்ன? கூடுதலான பிரதிநிதித்துவம் கோரினோம்; அது கிட்டவில்லை. வேறோர் பரிகாரம் தேடியாக வேண்டும். இதற்காக, பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழுகின்ற பிறநாடுகளைப் பார்ப்போம்.

இலங்கையில் இருப்பது போலவே, அந்நாடுகளிலும் பல்வேறு மொழிகளைப் பேசும் இனம் ஒவ்வொன்றும் தத்தம் உரிமைகளைக் கவனமாகப் பேணிவந்தன. சிறிய மொழிவாரி இனங்கள் பெரிய மொழிவாரி இனங்களால் விழுங்கப்படாமல் தங்களைப் பாதுகாத்துக் கொண்டன. இவ்விதம், மொழிவாரி இனங்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவுகளை நீக்குவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன.

தொடரும் ...

–இளையபாரதி–

# இலங்கையில் நான் தான் பிரதம நீதியரசர்

## – ஷிராணி பண்டாரநாயக்கா.



சட்ட ஆட்சியைத் திறவுகோலாகக் கொண்டு, உரிமைகளை நிலைநிறுத்துகின்ற ஓர் தேசத்தில், நான் தான் இன்னும் சட்டரீதியாக நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர் என, சிறிலங்கா அரசுத்தலைவரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட, கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கா, இன்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு ஈடுகொடுத்து, நான் சுதந்திரமான நீதித்துறைக்காகவே பாடுபட்டதால், இன்று பாதிக்கப்பட்டுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையை இங்கு தருகின்றோம். நீதிக்குப் புறம்பான முறையில், அவதூறு செய்யப்பட்டு பழிசுமத்தப்பட்டவராக, எதுவித ஏதுக்களும் இன்றி, உதறி எறியப்பட்டவளாக நான் இன்று உங்கள் முன்னிலையில் நிற்கிறேன். கடந்த சில வாரங்களாக, என் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கு இந்த இலங்கைக் குடியரசின் ஒரு பிரதம நீதியரசர் மட்டுமல்ல, எந்தவொரு குடிமகனும் உள்ளாக்கப்பட்டிருக்கக்கூடாது.

எனது 54 வயது நிரம்பிய வாழ்க்கைக்காலத்தில், 32 வருடகாலத்தில் எனது தாய் நாட்டிற்கு, பல்வேறுபட்ட பரிமாணங்களில், பல்தரப்பட்ட நிலைகளில் செய்த சேவைக்கு துரதிஸ்டவசமான முறையில் கிடைத்திருக்கும் மிகப்பெரிய சன்மானம் இது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம், எதேச்சதிகாரமாகவும் தன்னிச்சையாகவும் குற்றவாளியாக்கப்பட்டாலும், நான் சட்டரீதியானமுறைகள் மூலம் அதனை முகங்கொடுத்துள்ளேன். நான் நம்பிக்கை வைத்திருக்கின்ற இயற்கை நீதிக்கோட்பாடு, மற்றும் சட்டரீதியான நடவடிக்கை முறைகள் தொடர்பில், நம்பிக்கை கொண்டு ஆரம்பம் முதல், அதனை நிலைநிறுத்தி உயர் நீதிமன்றங்களிலும் உறுதி செய்தேன்.

சபாநாயகர் அவர்கள் அரசியலமைப்பை வியாக்கியானம் செய்வதற்கான நியாயாதிக்கம், உயர்நீதிமன்றத்திற்கு உண்டு என்பதை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், உயர்நீதிமன்றத்தின் கடந்த வியாக்கியானத்தில், பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் அதன் நடவடிக்கை முறைகள் யாவும், சட்டவிரோதமானது எனவும், அரசியலமைப்பிற்கு முரணானது எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆகவே பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தீர்மானம், எதுவித வலுவோ அதிகாரமோ அற்றதும், சட்டரீதியான நியாயாதிக்கமின்றி மேற்கொள்ளப்பட்டதென்ற அடிப்படையில், செல்லுபடியற்ற ரத்துச்செய்யப்பட்ட தீர்மானமாகவே கருதப்படும்.

பிரதம நீதியரசர் என்ற பதவி மட்டுமல்ல, நீதித்துறையின் சுதந்திரத்திற்கே பங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்ட ஆட்சி இயற்கை நீதி நீதித்துறை சுதந்திரம் என்பன, தூக்கியெறியப்பட்டிருக்கின்றன. காட்டுமிராண்டித்தனமாக சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன.

கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு ஈடுகொடுத்து, நான் சுதந்திரமான நீதித்துறைக்காகவே, நீதியின் பால் பாடுபட்டதால் தான், இன்று பாதிக்கப்பட்டுள்ளேன். சட்டத்தின் ஆட்சி மேலோங்கி நிலைநிறுத்தப்பட்டிருந்தால், இவ்வாறான அநீதியான முறையில் நான் தண்டிக்கப்பட்டிருக்கமாட்டேன். எனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும், உண்மைக்குப்புறம்பான படுபொய்கள்.

குற்றச்சாட்டுக்களில் ஏதும் உண்மை தென்பட்டிருந்தால், ஒரு கணம் கூட, இந்த மகிமைமிது பிரதம நீதியரசர் பதவியில் நான் நீடித்திருக்கமாட்டேன். ஒரு குற்றமற்றவர் என்பதனால், இந்த நாட்டின் பிரதம நீதியரசராகவும், ஒரு பிரஜையாகவும், ஒரு சாதாரண மனித பிறவியாகவும், நான் இன்று உங்கள் முன்னிலையில் நிற்கமுடிகிறது.

நான் எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில், அல்லது அலுவலக அறையில் தொடர்ந்திருப்பேனானால், வன்முறைகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் இப்பொழுது தென்படுவதனால் , சட்டத்தரணிகள் மற்றும் விசுவாசமான சாதாரண பிரஜைகள் உட்பட்ட, அப்பாவிப் பொதுமக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதால், நான் எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்தும், அலுவலக அறையில் இருந்தும், வெளியேறும் நிலைக்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளேன்.

உயர்ந்த மகத்தான நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் நிலைநிறுத்துவதற்கும் என்னுடன் நின்ற உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை இப்பொழுது தெரிவித்துக்கொள்கின்றேன். இன்று எனக்கு நீதி கிடைக்காவிட்டாலும் நான்செய்ததையும் நானும் எனது நம்பிக்கையைப் பகிர்ந்தவர்களும் எதற்காகப் பாடுபட்டோமோ அதனைக் காலமும் இயற்கையும் சரியென ஒரு நாள் உணர்த்தும்.

# கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் தமிழீழ விடுதலைப் புலிகளும்.



தமிழ் ஈழ விடுதலை புலிகள் இயக்கம் குறித்து, என்னுடன் பேசாதீர்கள், நான் அந்த அமைப்பினைச் சார்ந்தவன் அல்ல, புலிகள் வன்முறையினை தமது செயற்பாடுகளாக கொண்டிருந்தார்கள், ஆனால் இந்த நாட்டில் வசிக்கும் அப்பாவி மக்களே, 1950ஆண்டில் இருந்து 1980 ஆண்டு வரையில் இன்னலுக்கு உள்ளானார்கள் (Dont` talk about the LTTE. I am not part of the LTTE. I agree that the LTTE practised violence,but innocent Tamil people of this country never practised any violence. All the Tamil people ware victims form the `50s till the`80s.) இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள், கொழும்பில் இருந்து! வெளிவரும் த நேசன் (The Nation) என்ற ஆங்கியல பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியல் தெரிவித்துள்ளார்.

மேலும் புலிகளை வெல்வதற்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச எவ்வளவு கடினமாகச் செயற்பட்டாரோ, அதே போன்று, தமிழர்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வினைப் பெறுவதிலும் அவர் கடினமாகச் செயற்பட வேண்டும் என்றும், அப்படியாக அவர் கடுமையாக செயற்பட்டால், நிச்சயம் தீர்வு ஒன்றினை எட்ட முடியும் என, தான் முழுமையாக நம்புவதாகவும், அதற்கு தான் துணைபுரிவேன் (He must try as hard as he tried to defeat the LTTE, to find a political solution, and if he tries hard, he can find it. We Will help him.) என்றும், சம்பந்தர் அந்த பத்திரிகையின் ஊடாக, ஜனாதிபதிக்குத் தகவல் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், திரை மறைவில் அரசுடன் பேச்சுக்களை மேற்கொண்டு வருவதாகவும், இது குறித்து தாம் சம்மந்தருடன் வினவிய போது, அந்த சந்திப்புக் குறித்த விபரங்களைக் கூறுவதினைத் தவிர்க்கவும், த நேசன் பத்திரிக்கை தெரிவித்துள்ளது. இம் மாதம் 3ஆம் திகதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய தூதுவரை பிற்பகல் சந்தித்து விட்டு, அதே தினம் மாலை வெளிநாட்டு செயலர், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்களைச் சந்தித்து, பேச்சுக்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்திய தூதுவரைச் சந்திப்பதற்கு முன்னரும், பின்னரும் பத்திரிகைகளுக்கு தாமே அழைப்பு விடுத்து, செய்தி கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜி.எல்.பீரிஸ் உடனான சந்திப்புக் குறித்து, இருட்டடிப்பு செய்தது ஏன்? தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்தோ, அல்லது வட கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி குறித்தோ, இவர்கள் பேசுவதாக இருந்தால், அதனை பத்திரிகைகள் ஊடாக, தமிழ் மக்களுக்குத் தெரியபடுத்தி இருக்கலாம். ஆனால் திரைமறைவில் இந்த பேச்சுக்களை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏன் மேற்கொள்ள வேண்டும்? ''மடியிலே கனம் இருந்தால், வழியிலே பயம் இருக்கும்'' என்று கூறுவார்கள். தேர்தல் நேரத்தில் தமிழர் தேசியம், தன்னாட்சி என்றெல்லாம் பேசிவிட்டு. அரசுடன் பேசினால் அந்த மக்கள், என்ன நினைத்துக் கொள்வார்களோ என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னுகிறார்கள் போல் தெரிகிறது.

ஒரே நாட்டிற்குள் தீர்வு என்ற முடிவிற்கு வந்த பின்னர், அரசுடன் பேசித்தானே ஆகவேண்டும், இதனைத் தமிழ் மக்களுக்கு விளங்கப்படுத்துவதினை தவிர்த்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏன் கண்ணாம் பூச்சி விளையாட வேண்டும்? 2004ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தில், புலிகள் இயக்கமே ஈழத்தமிழ் மக்களின் ஏகோபித்த இயக்கம், அதன் தலைவரே ஈழத்தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர், என்றெல்லாம் மக்களிடம் கூறி வாக்குகளை பெற்றுக்கொண்டு, நாடாளுமன்றம் சென்ற சம்மந்தர், இன்றுபுலிகளே வன்முறைகளை மேற்கொண்டார்கள் என்றும், தான் புலிகளில் ஒரு அங்கம் அல்ல (I am not part of the LTTE ) என்றும் கூறுவது, காலத்திற்கு ஏற்றால் போல், இசைவாக்கம் அடையும் அவரின் தனித்தன்மையையே காண்பிக்கின்றது.

மேலும் முஸ்லீம் மக்களுக்கான தீர்வு குறித்து, த நேசன் பத்திரிகையாளர் வினவிய கேள்விக்கு சம்மந்தர் பதில் வழங்குகையில், (You do not worry about the Muslim factor. you leave the muslim factor to us. the muslim people and we will come to a settlement and will resolve this question in an acceptable way.) முஸ்லீம் மக்கள் குறித்து, நீங்கள் கவலை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை, அதனை எங்களிடம் விட்டுவிடுங்கள், நாங்களும் முஸ்லீம் மக்களும், எங்களுக்குள் பேசி பிரசினைகளுக்கான தீர்வினை கண்டு கொள்வோம். என்று பதில் வழங்கியுள்ளார்.

வன்னி, யாழ்ப்பாணம், மூதூர் ஆகிய பகுதிகளில் இருந்து, புலிகளினால் முஸ்லீம் மக்கள் விரட்டப்பட்ட போது, அந்த மக்களுக்காக ஒரு சிறிதளவேனும் அனுதாபத்தினைத் தெரிவிக்காது, புலிகளைத் திருப்திப் படுத்திய சம்மந்தர், அந்த மக்களுடன் பேசி பிரச்சினையை தீர்ப்பார் என்று கூறுகின்றார். புலிகளினால் விரட்டப்பட்ட முஸ்லீம் மக்கள், 20 வருடங்களுக்கு மேலாக, புத்தளம் பகுதியில் இன்னமும் தற்காலிக குடிசைகளிலே தங்கியுள்ளனர். இவர்கள் இன்றும், கவனிக்கப்படாத



மக்களாகவே இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். நிலமை இவ்வாறு இருக்கையில், முஸ்லீம் மக்களின் பிரச்சினையை, தங்களிடம் விடுமாறு சம்மந்தர் கூறுகின்றார்.

நாடுகடந்த தமழ் ஈழ அரசு குறித்து, பத்திரிகையாளர் வினவியமைக்கு, அது எழுத்தளவில் மட்டுமே உள்ள விடயம் (The trans national government is only on paper ) என்று கூறியுள்ளார். மொத்தத்தில் புலிகள் குறித்தும், நாடு கடந்த தமிழ் ஈழ அரசு குறித்தும், அவர் அலட்டி கொள்ளவில்லை. மேலும் கடும் போக்காளர்களாக இருக்கின்ற புலிகளை, தாம் விலக்கி வைத்துள்ளதாகவும், கடந்த தேர்தலில், அவர்கள் எவருக்கும் தான் நியமனம் வழங்கவில்லை எனவும் கூறியுள்ளார். புலிகளை அழித்தொழிப்பதற்கு ஜனாதிபதி எவ்வளவு கடுமை யாக உழைத்தாரோ, அதே போன்று தமிழ் மக்களுக்கான தீர்வினைக் காண்பதிலும் செயற்பட வேண்டும் என்று, சம்மந்தர் கூறுவதின் மூலம், புலிகளை அழித்தொழித்தமையினை அவர் அங்கீகரித்து, அதனை ஏற்றுக் கொள்வதாகவே, அவரின் பதில் அமைந்துள்ளது.

ஏனைய தமிழ் கட்சிகளின் தலைவர்கள், வெளிபடையாக அரச பிரதிநிதிகளை சந்தித்தால், அது குறித்து விமர்சனம் செய்யும் கொழும்பு தமிழ் பத்திரிகைகள், தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அரசுடன் மேற்கொள்ளும், திரை மறைவிலான சந்திப்புக்கள் குறித்த செய்திகளை, கூறுவதில்லை. முன்னாள் தமிழக முத்வர் காமராஜர், பத்திரிகையாளர்களுக்கு அறிவுரை வழங்குகையில்,''ஒண்ணு பத்திரிகைகாரனா இருங்க, அல்லது அரசியல் வாதியாகளாக இருங்கள், அல்லது பிசினஸ்மானாக இருங்க, மூணாகவும் இருக்க முயற்சி பண்ணாதீங்க'' இதனைத்தான் இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கும் கூற வேண்டும்.

- ஆகாஷ் -

# அடங்காப்பற்றின் மாவீரன்! வணங்காமுடி பண்டாரவன்னியன்

சென்றவாரத் தொடர்ச்சி...

மக்கள் கூட்டத்தைச் சிறிது நேரம் பெருமையுடன் நோக்கினார். வன்னி நாச்சியார் அதன் பின் மக்களுக்கு பெண் சிங்கம் போன்று கம்பீரத்துடன், செய்தியைச் சொல்லத் தொடங்கினார். ''நீங்கள் எல்லோரும் இவ்வளவு ஆர்வத்துடன், இரவு முழுவதும் விழித்திருந்து, இங்கு ஆவலுடன் வந்திருக்கின்றமையை நோக்கின், மிகவும் பெருமிதமாக உள்ளது.

எம்படைகள் இன்றும் பனங்காகம் திரும்பப்போவதில்லை. ஆனால் நீங்கள் எதிர்பார்க்காத ஓர் இன்பமான செய்தியை, நான் சொல்லுகின்றேன். எம்படைகள் தங்கள் மூன்றாவது வெற்றியையும் நிலைநாட்ட, இன்று அதிகாலை, யானை இறவைத் தாக்கத் தொடங்கிவிட்டன. இதில் என்ன சந்தோசமான செய்தி என்றால், வழமைபோல் இரண்டு படையணியே போர் தொடுக்கின்றன. ஒன்றுக்கு எம் மன்னவரும், மற்றைய அணிக்கு எம படைத்தளபதியோரும் முதல் மந்திரியுமான, உங்கள் நல்லமாப்பணருமே போர் தொடுக்கின்றனர்.

மிக விலைவில் உங்களுக்கு யானை இறவை இழந்த செய்தியை சொல்லச் சொல்ல ஆவலுடன் உள்ளேன். நீங்கள் யாவரும் அமைதியுடன் உங்கள் வேலைகளில் ஈடுபடுங்கள். எனக் கூறிமுடித்து புன்னகை ஒன்றை சிந்திவிட்டு, உள்ளே சென்றார். மக்கள் பெரிதும் மகிழ்வுடன் கூக்குரல் இட்டு, தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுச் சந்தோஷத்துடன் தத்தம் வேலைகளைக் கவனிக்கச் சென்றனர்.

6 ஆம் நாள் இரவு, பனங்காமப் படைகள் பூநகரியில் இருந்து கைலைவன்னியன் தலைமையில் புறப்பட்டது. ஆரவாரத்துடன் படைகள் புறப்பட்டாலும் பூநகரியைத் தாக்கும் போது இருந்த ஆளணிக்கும், இப்போது புறப்படும் ஆளணிக்கும் இடையில் பெரும் வேறுபாடு இருக்கவில்லை என்றாலும், பூனகரியில் படைகளின் இழப்புக்கள் கணிசமானவளவு இருந்துள்ளது என்பதை மறுக்கமுடியாது.

அந்நியர் காலடியில் தாய்மண் தவிப்பதை எந்தத் தவப்புதல்வன் தான் பொறுத்துக் கொள்வான். ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனி சிறந்ததல்லவா'' தம் குருதிக் கடலலையால் எதிரிகளின் கோட்டைகளைத் தகர்த்து, வீரசுவர்க்கம் கொண்ட அந்த வீரர்களுக்காக புறப்படும் பொழுது, நடுகல் நாட்டப்பட்டு அவ்வீரர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்த கைலைவன்னியன் தவறவில்லை.




அவ்வேளையில் வீரர்களுக்கு அவன் ஆற்றிய உரையில், எஞ்சிய வீரர்களுக்கும் நல்ல மாப்பாணரால் தயார் நிலையில், போருக்குப் பயன்படுத்தாது இணைக்கப்பட்ட படையினருக்கும் புது உத்வேகத்தையளித்து அவர்கள் உடம்பில் நரம்பை முறுக்கடையச் செய்ததும், ஒவ்வொரு வீரர்களின் உடலிலுள்ள உரோமங்கள் சிலிர்த்துக் கொண்டன.

ஆனையிறவுக் கோட்டையின் கற்களும் மிஞ்சுமா? என எண்ணும் படி படைகள் நகர்ந்தன. கிளிகள் நொச்சிமரங்களில் கொஞ்சிக்குலாவி மழலையில் காதல் செய்து இன்புற்றிருக்கும் இடமாகையால் கிளிநொச்சி எனப் பெயர் பெற்ற இடத்தினை படைகள் அடைந்து அங்கிருந்து பரந்தனூடாக நகர்ந்து ஆனையிறவை அண்டி மறைவில் இடம் எடுத்திருந்தனர். கைலைவன்னியன் தன் படைத் தளபதிக்கு, நல்ல மாப்பாணரின் சமிக்ஞை கிடைத்தவுடன் தனக்குக் கூறும்படி கட்டளையிட்டுவிட்டு, படைகளின் நிலையிருப்புக்களை அவதானித்துக்கொண்டிருந்தான்.

தொடரும்...

– நாகநாதன் –

# பிராந்தியச் செய்திகள்



## சிறிலங்காவில் இன்னொரு ஆயுதக்குழு உருவாகும்
### – முன்னாள் ஜனாதிபதி ஆரூடகம்





சிறிலங்கா அரசாங்கம் தனது மூலோபாயத்தின் படியே தொடர்ந்து நடக்குமேயானால், இன்னும் சில ஆண்டுகளில் இன்னொரு போராளிக்குழு உருவாகும் என்று சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரித்துள்ளார். அடிப்படைவாத போகோ ஹராம் குழுவின் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நைஜீரியாவின் தலைநகர் லாகோசில் இருந்து வெளியாகும். யுலுழு ழுமுருடுயுதுயு இதழுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

**அவரது செவ்வியின் பகுதிகள் பின்வருமாறு:**

விடுதலைப் புலிகளுக்கு எதிரான மஹிந்த ராஜபக்சவின் தாக்குதல் இப்போது அனைத்துலக சமூகத்தில் மிகப்பெரிய விவகாரமாக உள்ளது. ஐ.நா மனித உரிமைகள் பேரவை அதை இன்னமும் விசாரித்துக்கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே பாராபட்சமாக நடத்தப்பட்டார்கள். அவர்களின் உரிமைகளை வழங்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற எனது அரசாங்கம் முதன்முதலாக இணங்கியது.

முழு உரிமைகளையும் கொண்ட ஒரு சமஸ்டி ஆட்சியை நிறுவ இணங்கப்பட்டது. ஆனால், ராஜபக்ச சிறுபான்மையின் உரிமைகளில் நம்பிக்கை கொண்டவரல்ல. அவர் ஒருவரே எனது அமைச்சரவையில் பேச்சுக்களுக்கு எதிராக இருந்தார். அவரது தேவை அவர்களை கொல்ல வேண்டும் என்பதாகவே இருந்தது. இப்போது ஒட்டுமொத்த உலகமுமே இராணுவத் தாக்குதலுக்கு எதிராக குரல் கொடுக்கிறது.

புலம்பெயர் தமிழர்கள் மீளஇணைகிறார்கள். தாக்குதல்களைக் கண்டிக்கிறார்கள். சிறிலங்கா அரசாங்கம் தனது மூலோபாயத்தின் படியே தொடர்ந்து நடக்குமானால், இன்னும் சில ஆண்டுகளில் இன்னொரு போராளிக்குழு உருவாகும். இறுதித் தாக்குதலின் போது பொதுமக்களின் மனிதஉரிமைகள் அவர்களால் மீறப்பட்ட சம்பவங்கள் நிறையவே இடம்பெற்றன.

ஏனென்றால், புலிகள் தம்மைச் சுற்றி பொதுமக்களை வைத்திருந்தார்கள். பொதுமக்களை சுட்டுவிழுத்த சிறிலங்கா அரசாங்கம் ஜெட் போர் விமானங்களையும் பயன்படுத்தியது. சிறிலங்கா அரசாங்கம் அதிகளவு மனிதாபிமான அணுகுமுறையில் செயற்பட்டிருந்தால், இந்தக் கொலைகளைத் தவிர்த்திருக்கலாம்.

பொதுமக்களைக் கொல்லவேண்டிய தேவை இருக்கவில்லை. இதனால் என்ன நடந்திருக்கிறது. எல்லோரும் கோபமுற்றிருக்கிறார்கள். தனியே தமிழ்ப்புலிகளை மட்டும் அழித்திருந்தால், யாரும் கவலைப்பட்டிருக்கமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் கொடூரமானவர்களாக இருந்தனர். அல்கெய்தாவுக்கு முன்னர், உலகிலேயே மிகப்பெரிய எண்ணிக்கையில் தற்கொலைக் குண்டுதாரிகளை அவர்களே உருவாக்கினார்கள்.

மக்கள் வன்முறைகளை விரும்பமாட்டார்கள். வன்முறைகளுக்கு மிகஆழமான காரணங்கள் இருக்கின்றன. எனவே முரண்பாடுகளுக்கான அந்தக் காரணங்களைக் கண்டறிய வேண்டும். அந்தக் காரணங்களை தீர்க்க வேண்டும். அடிப்படைக் காரணங்களை கண்டுபிடிக்கும் வரை நிறுத்தக்கூடாது. வம்ச அரசியல் முறையை நான் ஏற்கவில்லை. எனது பிள்ளைகளை நான் அரசியலுக்குக் கொண்டு வரவில்லை.


எனது தந்தையும் தாயும் அரசியலில் இருந்தனர். எனது தந்தை படுகொலை செய்யப்பட்ட பின்னர், அரசியலுக்கு வர எனது தாயார் மறுத்துவிட்டார். ஆனால் கட்சி அவரை வருமாறு கேட்டது. இதனால் நாம் ஆட்சியில் இருக்க வேண்டியதாகிவிட்டது. பின்னர் எனது தாய் மிகவும் புகழ் பெற்றார். அவர் தனது பணியை சரியாகச் செய்தார் என்று நான் நினைக்கிறேன். அவருக்குப் பின்னர் கட்சிக்கு இன்னொரு தலைவர் தேவைப்பட்டார். எனக்கு அரசியல் தேவையில்லை என்று நான் கூறினேன். நான் மறுத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், அதற்குள் நான் இழுத்து வரப்பட்டேன்.

வம்ச அரசியல் நல்லதல்ல என்று நினைக்கிறேன். எல்லாவற்றையும் தமக்காக அபகரிக்க ஒரு குடும்பத்துக்கு அது இடமளிக்கிறது. அந்த முறையில் ஊழல்கள் மோசமாக உள்ளது. சிறிலங்காவின் தற்போதைய அதிபர் மிகப்பெரிய ஊழல்களை செய்துள்ளார். அவரது குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 2000 பேர் அரசாங்கப் பதவிகளில் உள்ளனர். நான்கு சகோதரர்கள் அமைச்சரவையில் உள்ளனர்.

அவர்களின் பிள்ளைகள் நாடாளுமன்றத்தில் உள்ளனர். இந்த முறையில் உள்ள நன்மைகளை விட தீமைகளே அதிகம். தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் எப்படி உயிர் பிழைத்தேன் என்று எனக்குத் தெரியாது.

ஆனால் அது ஒரு அதிசயம். நான் எனது ஒரு கண்ணை இழந்தேன். எனக்கு இடது கண்ணில் பார்வை இல்லை. எனது மூளையில் இப்போதும் ஒரு இரும்புத்துண்டு உள்ளது. அந்தத் தாக்குதலில் எனது சாரதி உள்ளிட்ட 26 பேர் கொல்லப்பட்டனர்.

## ஷிராணியை விலக்கி மொஹானை நியமித்தமை, இஞ்சைச் கொடுத்து மிளகை வாங்கிய கதை – சரத் என் சில்வா




ஷிராணி பண்டாரநாயக்காவின் பதவி விலகலில், அரசியல் இருக்கக்கூடாது என்று குரலெழுப்பப்பட்டு வந்தது. எனினும் தமது அந்தக் கோரிக்கை பிழையானது எனத் தெரிகிறது என்று, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார். மொஹான் பீரிஸை பிரதம நீதியரசராக நியமித்தமையானது, இஞ்சைக் கொடுத்து மிளகு வாங்கிய கதையை போல உள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான முறையில், குற்றவியல் பிரேரணை விடயத்தில் தாம் நடுநிலையை கடைப்பிடித்ததாக குறிப்பிட்டுள்ள சரத் என் சில்வா, தற்போது அது பிழை என்று புரிகிறது எனக் குறிப்பிட்டார். மொஹான் பீரிஸ் சட்டமா அதிபராக இருந்த போது, அவருக்கு பல சர்ச்சைக்குரிய முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊடகவியலாளர் எக்னெலிக்கொட காணாமல் போனமை தொடர்பில், அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தெரவித்த கருத்து, நாட்டுக்கு அபகீர்த்தியை கொண்டு வந்து சேர்த்தது எனவும் சுட்டிக்காட்டினார்.

## யாழில் போதை பொருளால் 16 லட்சம் ரூபாய் வசூல்



யாழ். மதுவரி நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில், பதிவு செய்யப்பட்ட 601 மதுபான வழக்குகளினூடாக, 16,64,300 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக, மதுவரி நிலைய பொறுப்பதிகாரி எஸ். செந்தூர்செல்வன் தெரிவித்தார்.

கடந்த வருடம் 2012 ஜனவரி முதல், டிசம்பர் வரையான காலப்பகுதியில், யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்துறை பிரதேசங்களில் 601 மதுபான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக, யாழ்.மதுவரி நிலைய பொறுப்பதிகாரி கூறினார்.

இதில் 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு, சிகரெட் விற்பனை செய்த 371 வழக்குகளும் சட்டவிரோதமாக கள்ளு வைத்திருந்த, 123 வழக்குகளும், அனுமதியின்றி கள்ளு விற்பனை செய்த 59 வழக்குகளும், சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பில் 9 வழக்குகளும், கசிப்பு விற்பனை தொடர்பில் 1 வழக்கும் உட்பட, ஏனைய மதுபான குற்றங்களில் 38 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வர்த்தகர்கள், யாழ்.மற்றும் ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளையில், நீதிமன்றினால் தண்டப்பணமாக ரூ.16,64,300 அறவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## "திவிநெகும" மூலம் வறுமையை ஒழிப்போம்
### - வவுனியாவில் கருத்தரங்கு



(நமது நிருபர்)

'திவிநெகும' எனும் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் வறுமையை ஒழிப்போம் என்ற தொனிப்பொருளில், வவுனியா கலாச்சார மண்டபத்தில் அமைச்சர் 'றிசாட் பதியுதீன்' தலைமையில், விளக்கமளிக்கும் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீதி அபிவிருத்தி, விவசாயம், கால்நடை, தொழிநுட்பம், கைத்தொழில் மற்றும் ஏனைய அபிவிருத்தி தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதோடு, திணைக்களங்களின் தலைவர்கள் பலரும் அங்கு இது தொடர்பான விளக்கவுரைகளை வழங்கினர்.

பல அரச அதிகாரிகளும், சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சுமதிபால, மதக்குழுவினர் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன் ஒரு கட்டமாக, வவுனியா சிங்களப் பிரதேச சபையின் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டது. மஹிந்த சிந்தனையின் கீழ், வீதிப் புனரமைப்புக்கள், பாரிய கட்டுமானங்கள் என்பவை தேசத்தின் வளர்ச்சிப் பாதையை எட்டியுள்ளமை, வரவேற்கத்தக்கதோர் விடயமெனலாம்.

ஆனாலும், பல நாடுகளின் கடனுதவி மூலமே, இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை, இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை எவ்வாறு இலங்கையரசு கையாளப் போகிறது என்பது, மறுபுறம் இருக்கத்தான் செய்கிறது.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் மூலம் வறுமையற்ற இலங்கையை உருவாக்குவோம், என்ற நடைமுறைகளை மேற்கொள்வது இலங்கையரசின் நல்லதொரு திட்டமாகும். இவ்வாறான செயற்றிட்டங்கள், தொடர்ந்து செயற்படுத்தப்படுமாயின், சிங்கப்பூரைப் போன்று எமது இலங்கை தேசமும் செழிப்படையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.




# சினிமா உலகம்




## கண்பட்டுவிடாதீர்கள் – அர்ஜுனிடம் சொன்ன ஏ.ஆர் ரகுமான்




கடல் படத்தின் நடிகர், நடிகைகளை அறிமுகம் செய்யும் விழாவை நேற்று சென்னையில் நடத்தினார் இயக்குனர் மணிரத்னம். இந்நிகழ்வில் மணிரத்னம், ஏ.ஆர் ரகுமான், வைரமுத்து, அர்ஜுன், அரவிந்தசாமி, கார்க்கி மற்றும் படத்தில் அறிமுகமாகும் கவுதம், துளசி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அப்போது விழாவை தொகுத்து வழங்கிய அர்ஜுன், மேடைக்கு வந்தவர்களிடம் இரண்டொரு கேள்விகளைக்கேட்டுக்கொண்டிருந்தார். பின்னர் ரகுமான் மேடையில் தோன்றி ஒரு பாடலுக்கு பியானோ வாசித்தார். அதையடுத்து அவரிடம் அர்ஜுன் 20 வருடங்களாக மணிரத்னம் படங்களுக்கு இசையமைக்கிறீர்களே உங்கள் கூட்டணியின் இரகசியம் என்ன? என்று கேட்டார்.

அதற்கு, தயவுசெய்து கண்பட்டுவிடாதீர்கள் என்றார் ரகுமான். அதற்கு என் கண்ணு ரொம்ப நல்ல கண்ணு சார் என்று சிரித்துக் கொண்டே சொன்னார் அர்ஜுன். இதையடுத்து ரகுமான் மேலும் கூறும் போது, என்னை ரோஜா படத்தில் அறிமுகம் செய்தார் மணிசார்.

அந்த வகையில் அவர்தான் என் குரு. இப்போது வரை என்னிடம் இப்படி இப்படிப் பாடல் வேண்டும் என்று கூட அவர் கேட்பதில்லை. சொல்லிவிட்டுச் சென்றுவிடுவார் நானாகத்தான் செய்து கொடுப்பேன். அந்தளவுக்கு அவரது எதிர்பார்ப்புக்களை புரிந்து வைத்திருக்கிறேன். அவரும் அந்த நம்பிக்கையில் தான் வேலையைக் கொடுப்பார். மற்றப்படி எங்கள் கூட்டணி

## யார் மீதும் கோபம் இல்லை : ஓவியா



சில்லுனு ஒரு சந்திப்பு படத்தில் நடித்து வருகிறார் ஓவியா. இந்தப்படம் தனக்கு பெரிய திருப்பம் தரும் என்று நம்பும் ஓவியா தன் அழகைப் பல விதங்களில் படம் எடுத்து தயாரிப்பு அலுவலகங்களுக்கும், இயக்குனர்களுக்கும் மெயில் பண்ணியிருக்கிறார்.

சில்லுனு ஒரு சந்திப்பு படத்தின் படப்பிடிப்பின் போது உடன் நடித்த தீபாஷாவுடன் சண்டை போட்டார். இதனால் இருவரும் பேசிக்கொள்ளாமலே இருந்தார்கள். ஆனால் இப்போது இருவரும் நெருக்கமான தோழிகளாகிவிட்டார்கள். நடிகையாக இருந்தாலும் நாங்களும் மனுசங்கதானே எங்களுக்கு கோபம் வராதா? எனக்கும் தீபாவுக்கும் சில மனவருத்தங்கள் இருந்தது, ஆனால் அதெல்லாம் இப்போ இல்லை. நாங்க நல்ல தோழிகளாகிவிட்டோம். எங்க ரெண்டு பேருக்குமே இந்தப்படம் முக்கியமான படம். அதனால படத்தோட புரமோஷனுக்கு சேர்ந்தே போறம் என்கிறார் ஓவியா.

## விதார்த்தை ஏமாற்றிய படாதிபதிகள்



'மைனா' விதார்த்துக்கு, அதன்பிறகு நடித்த படங்கள் தோல்வியைக் கொடுத்ததால், இப்போது அவர் நடித்து வந்த சில படங்கள், இழுபறியில் நிற்கின்றன. அதனால் இந்த நேரத்தில் தாக்குப்பிடிக்க, சில படங்களில் இரண்டு ஹீரோக்களில் ஒருவராகவும் நடித்து வருகிறார்.


அதே சமயம் சின்ன வேடமோ, பெரிய வேடமோ எதுவாக இருந்தாலும், பேசினபடி சம்பளத்தைக் கொடுத்துவிடுங்கள். அட்வான்ஸை மட்டும் கொடுத்துவிட்டு பின்னர் கைவிரித்துவிடாதீர்கள் என்று சில படாதிபதிகளிடம் கேட்டுக் கொண்டு வருகிறார் விதார்த்.

அவரிடத்தில், பேசின சம்பளத்தை எப்படித் தராமல் இருப்பார்கள் என்று கேட்டால், சினிமாவில் பேசினபடி சம்பளத்தை வாங்குவது என்பது சாதாரண விடயமல்ல. மைனா படத்துக்குப் பிறகு நான் பல படங்களில் நடித்துவிட்டேன். முதலில் பத்து இலட்சம் சம்பளம் தருகிறேன் என்று சொன்னால், ஐம்பதாயிரமோ, இலட்சமோ தந்து புக் பண்ணுவார்கள்.

பின்னர் மீதமுள்ள சம்பளத்தை வாங்குவதற்குள் டவுசர் கிழிந்துவிடும். நடித்த படம் பெரியளவில் வியாபாரம் ஆனால் கூட, எப்படியும் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை ஏமாற்றிவிடுவார்கள். அந்த வகையில் சினிமாவில் நான் நிறைய ஏமாந்திருக்கிறேன்.

ஆனால் இனி அப்படி யாரிடமும் ஏமாறக்கூடாது என்பதற்காக, க்ளைமாக்ஸைப் படமாக்கும் போதே, மொத்த சம்பளத்தையும் கறந்துவிடுகிறேன். இது சினிமாவிலுள்ள அனுபவசாலிகள் எனக்குக் கற்றுத்தந்த பாடம் என்கிறார் விதார்த்.

## "திருமதி தமிழ்" பிலிம் செலவு 84 இலட்சம்



தேவயானி சொந்தமாகத் தயாரித்து வரும் படம் திருமதி தமிழ். அவரது கணவன் இராஜகுமாரன் இயக்கி அவருக்கு ஜோடியாகவும் நடிக்கிறார். தேவயானிக்கு இரட்டை வேடம். இராஜகுமாரனுக்கு தேவயானி, கீர்த்தி சவ்லா என இரண்டு ஜோடி சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக படத்தைத் தயாரித்து வருகிறார்கள்.

சின்னத்திரையில் நடித்த பணத்தையெல்லாம் தேவயானி இந்தப் படத்தில் கொட்டியிருக்கிறார். இதுவரை படத்திற்கு ஆகியிருக்கும் செலவு 6கோடி என்கிறார்கள். எல்லோரும் டிஜிட்டலில் படம் எடுக்கும் போது, நான் பிலிமில் படம் எடுக்கிறேன். ஒரு இலட்சத்து 40 ஆயிரம் அடி பிலிமில் படத்தை எடுத்திருக்கிறேன், என இராஜகுமாரனே சொல்லியிருக்கிறார்.

400 அடி கொண்ட ஒரு கேன் பிலிமின் விலை 24ஆயிரம் ரூபாய். அப்படியென்றால் இராஜகுமாரன் கணக்குப்படி இதுவரை பிலிமுக்கு மட்டும் 84 இலட்சம் செலவு செய்திருக்கிறார். சராசரியாக ஒரு படத்தின் நீளம் சுமார் 15ஆயிரம் அடி. திட்டமிட்டுப் படம் எடுத்தால் 50ஆயிரம் அடிக்குள் படத்தை முடிக்கலாம்.

ஆனால் இராஜகுமாரன் எடுத்திருப்பது ஒரு இலட்சத்து 40ஆயிரம் அடி. இப்போது படம் முடிந்துவிட்ட நிலையில் அதை வாங்க யாரும் முன்வரவில்லை. அதனால் சொந்தமாக வெளியிடத் திட்டமிட்டு வருகிறார்கள். போட்ட பணமாவது திரும்ப வரவேண்டுமென்று தேவயானி கோவில் கோவிலாகச் சுற்றிக்கொண்டிருக்கிறார்.

## இளைய தளபதியின் புதிய படம் "தலைவா"



துப்பாக்கி படத்திற்குப் பிறகு, விஜய் நடிக்க இருக்கும் புதிய படத்தின் படப்பிடிப்புக்கள் மும்பையில் நடந்துவருகிறது. இதில் விஜயுடன் அமலாபால், சத்தியராஜ், சந்தானம், சுரேஷ், மனோபாலா, பொன்வண்ணன் ஆகியோர் நடித்து வருகின்றனர். 50சதவிகிதப் படப்பிடிப்புக்கள் முடிந்துவிட்ட நிலையிலும், படத்திற்குத் தலைப்பு வைக்கமலிருந்தனர்.

இளைய தளபதி, தங்கமகன், தலைவன், தளபதி என்று பல தலைப்புக்கள் ஆலோசனையிலிருந்தது. ஒவ்வொரு தலைப்பு முடிவாகும் போதெல்லாம் ஏதாவதொரு சிக்கல் ஏற்பட்டு அது கைவிடப்படும் சூழ்நிலை உருவாகியது. இந்நிலையில் 'தலைவா' என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வமாகத் தெரிவித்திருக்கிறார்கள். படத்தில் தலைவா, தலைவா....... என்று தொடங்கும் அறிமுகப்பாடல் ஒன்றை நா.முத்துக்குமார் எழுதியுள்ளார்.

சசிகலாவின் உறவினர் பாஸ்கரன் தலைவன் என்ற பெயரில் ஒரு படத்தில் நடித்து வருகிறார். ஏற்கனவே துப்பாக்கி படத்தின் போது, 'கள்ளத்துப்பாக்கி' என்று பெயர் வைத்தவர்கள் நீதிமன்றத்துக்குச் சென்றார்கள்.

அதே போலத் தலைவன் படத் தயாரிப்பாளரும் செல்வார் என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர். த லைவன படத் தயாரிப்பாளர், மற்றும் பாஸ்கரனுடன் பேசி அவர்களின் ஒப்புதலுடனேயே, இந்தத் தலைப்பு வைக்கப்பட்டிருப்பதாக இன்னொரு தரப்பினர் கூறுகின்றனர்.

## டாப்ஸியை மிரட்டிய நயன்தாரா



ஐயா படத்தில் அறிமுகமாகியவர் நயன்தாரா. அஜீத்துடன் நடித்த பில்லா படத்துக்குப் பிறகுதான் பரபரப்பான நடிகையானார். காரணம் அதுவரை கிளமர் விடயத்தில் ஓரளவு அடக்கி வாசித்த நயன்தாரா அந்தப் படத்தில் துணிச்சலான பிகினி உடைக்கு மாறினார். ஏற்கனவே அவரது அழகின் மயக்கத்தில் இருந்த இளவட்ட இரசிகர்களுக்கு அது இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

அதன் பிறகுதான் நயன்தாராவின் மார்க்கெட்டும் சூடுபிடித்தது. இந்நிலையில், தற்போது செக்கன்ட் இனிங்ஸில் இருக்கும் அவர் அந்த மாதிரியெல்லாம் இருக்கமாட்டார் என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஆரம்பத்தில் அமைதி காத்த நயன் இப்போது மறுபடியும் கட்டவிழத் தயாராகிவிட்டாராம். மீண்டும் அதே அஜித், விஷ்ணுவர்தன் படத்தில் இணைந்திருக்கும் அவர், ஆன்மீகவாதி போல அமைதியாகக் காட்சி தந்தாலும் கமரா கண்களுக்கு போதும் போதும் என்கிற அளவிற்கு கவர்ச்சி விருந்தளித்து வருகிறாராம். நயன்தாராவின் இத்திடீர் தாராளம் கண்டு படத்திற்கான வியாபாரம் இன்னும் எகிறும் என்று படக்குழு உற்சாகத்தில் இருக்கிறது.

ஆனால், நயன்தாராவின் அதிரடி கவர்ச்சிக்கு முன்னால் உன் நடிப்புக் காணாமல் போய்விட்டது என்று சிலர் சொல்ல, ஆரம்பத்தில் கிளாமரில் நாம்தான் தூக்கலாக இருப்போம் என்று கணக்குப் போட்டிருந்த அப்படத்தின் இன்னொரு நாயகியான டாப்ஸி மிரண்டு போயிருக்கிறாராம்.



# கவிதைப் பூங்கா




## இது நியாயமா?

கண்டேன் உன்னை
பிறந்ததும் என் அருகில்
காலமெல்லாம் என்னுடனே
வாழ்வாய் என்று நானிருக்க
எனை ஏமாற்றி விட்டாயே
இது நியாயமா?

யார் வந்து அழைத்திடினும்
உனை விட்டுப் பிரியமாட்டேன்
என்றெனக்குக் கூறிவிட்டுத்
தனிமையிலே நீ மட்டும்
அமைதியாகத் தூங்குகிறாய்
நான் இங்கு ஏங்குகிறேன்
இது நியாயமா?

சு.லுஜிதா.
தட்சணாமருதமடு.
பாலம்பிட்டி.





## வாழ்க்கைச் சக்கரம்

அங்கே
பார் – அந்தக்
கடிகாரத்தைப் பார்
அங்கே
ஓடிக்கொண்டிருப்பவை
நேரத்தைக் காட்டும்
முட்கள் அல்ல
உன் வாழ்க்கையின்
சக்கரம்
எண்ணிப்பார்
திட்டமிடு
முன்னே செல்

சி. அபிநயா
மத்திய வீதி
காரைதீவு – 08

## நாம் வாழும் பூமி

செந்தணல் பூமி சிதறியதே
வெண்பனி மேகம் விலகியதே.
உறைபனி உருகி ஓடியதே
செம்மண் பூமி சிவந்ததுவே

உழைத்து வாழ்ந்த எம் பூமி
கசக்கி வீசிய காகிதம் போல்
கண்ணீர் சிந்தி வடிக்கின்றது.
களையிழந்து தெரிகின்றது.

நம்மவர் வாழ்ந்த பூமி இது..!
நகைப்புக்கு இடமாய் போனதினால்..
நாளை விடியல் பிறக்குமா?..
நமது வாழ்வு சிறக்குமா?

வு.துரை
வித்தியா புரம்
ஒட்டுசுட்டான்.





## உயர்ந்த உறவு

முகமாலையோரம்
முகம் காட்டி
நின்ற பனையே

முன்பெல்லாம்
உன் அடியோரத்து
பாதையில்
எத்தனை தடவை
நடந்திருப்பேன்

நண்பனோடு
அமர்ந்து பேச
நிழல்தந்தாய் அல்லவா?

எம் மக்கள்
உள்ளத்து
கற்பகதருவே

இன்று
பேருந்து பயணத்தில்
யன்னலோரத்தால்
உன்னை
எட்டிப்பார்க்கின்றேன்
வட்டிழந்து
நிற்கின்றாய்

இருந்தும்
எந்நிலத்து பறவைகட்கு
இருப்பிடம்
கொடுத்திருக்கின்றாய்

நீ உயரத்தில் மட்டும்
உயர்ந்தவன்
அல்ல
உள்ளத்திலும்
உயர்ந்தவன் தான்.

ஆ.முல்லைதிவ்யன்
வல்வெட்டித்துறை



## பூந்துணர்



எத்தனையோ
வண்டுகளை
முகர்ந்துவிட்ட நீ
உண்மையிலே
ஒரு மலரல்லவே
பூந்துணர் நீ

மு.அருணகாந்
யாட்வீதி
கல்முனை




## ஞாபகம் இருக்கிறதா?

அன்றொரு நாள்
குளிர் காற்று
ஜில்லென்று வீசிட
நீயும் நானும்
ஒரே போர்வைக்குள்
உல்லாசமாய்
உறங்கிக் கிடந்த
அந்த இனிய நாட்கள்
ஞாபகமிருக்கிறதா

ஆகாஷ்
மட்டக்களப்பு

## வசந்த கால மலர்...

"டில்லி மலரிவள்"
வசந்த காலத்தில்
மலர்ந்த – அழகான மலர்
இயற்கை–அன்னையின் மடியில்
கல்வி என்னும்–பாலைக் குடித்து
பற்றீசலாக வளர்ந்த
அறிவு மலரிவள்
மருத்துவப்பட்டத்தை
எடுத்துக் கொண்டவள்
புகழ் பூத்த மலராக
வளரும்–இந்த நேரத்தில்
மனிதக் கருவண்டுகள்
அவள் ...
அழகுவதைத்தை
மேயும் போது
அவள் ...
பட்ட அவஸ்தையை
யார் அறிவார்..?
காலமே – அந்த
மனிதக் கரு வண்டுகளுக்கு
தூக்குத் தண்டனை
நிறைவேற்றுவாயா..?



வீ.அருள்ராஜ்
பாடசாலை வீதி
கொம்மாந்துறை

## என்னடா உலகமிது?


நன்றி கெட்ட உலகமடா –
இது
நாணமில்லா நாடடா.
பண்புடனே பழகி விட்டு
நாறடிக்கும் கூட்டமடா.

எண்ணிப் பார்த்து விட்டு –
சற்று
எட்ட நின்றால் நல்லமடா –
இது
பொல்லாத உலகமடா.

கவிஞன் தாரணி
யாழ்ப்பாணம்



## யார் அந்த மழைத்துளி



என் வாழ்வில் – வந்த
மழைத்துளியே
என் சோகம் எல்லாம்
பறந்திடுதே
என் காதலின் சோகங்கள்
கண்ணீர்த் துளிகளாய்
பூமியை நனைக்கிறதே


இரணியன்
யாழ்ப்பாணம்

### கவிதைப்பூங்கா வாசகர்களுக்கு...

தாங்கள் கவிதைப்பூங்காவுடன் கொண்டுள்ள இறுக்கமான பிணைப்பிற்கு என்றும் நன்றிகள். வாசகர்களின் கவிதைகள் நிறையவே குவிகின்றன. இடம் கொடுக்கும் நோக்குடன் கவிதைகளை 16 வரிகளுக்குள் மட்டுப்படுத்துவதுடன் தரமானதாகவும் அனுப்பி வைக்குமாறு வினயமாக வேண்டுகின்றோம்.



# புனைகதைப் புயல்



## ஆகாயத்தாமரைகள்

சிறுகதை

" ஏய் புள்ள அண்டைக்கு வாங்கிய கடன், அறுபது ரூபாய் வரைக்கும் இருக்கு. போய் உங்க அம்மாவை வரச்சொல்" என்றாள். அந்தத் தடித்த உடம்பை உடைய கடைக்காரி சின்னக்குழந்தைக்கு இது எதுவும் முதல்தடவையல்ல. தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு, கீழே நழுவிய பாவாடையை வலக்கையால் பிடித்துக்கொண்டு, தங்கள் குடிசையை நோக்கி நகர்ந்தாள்.

சுசியின் வருகையைக் கண்ட வாசுகி, அகதிமுகாமின் சனக்கூட்டச் சத்தத்துக்குள் " என்னம்மா பாண் வாங்கவில்லையா "
" அம்மா, அவங்க தரமாட்டாங்களாம் உங்கள வரட்டாம்மா..."


அவங்களும், நாங்களும் இருக்கிறது முகாமில. அதுலவேற அவங்களுக்கு பிறிச் பாவிக்கணும், ஆட்டோ ஓடணும். சத்தமா றேடியோ போடணும், பெரிய கடையைத் திறந்து, நெருப்பு விலைக்கு சாமான்களையும் விற்கணும், குழாய் கிணற்றில் தண்ணீர் அடிக்க வந்தாலும், அவங்களக் கண்டா நாங்க ஒதுங்கணும். ஏதோ நாங்க பிச்சக்காரக் குடும்பம் என்று பேசுவாங்க. காவலுக்கு இருக்கிற பொலிசுக்கு, சாராயத்தைக் கொடுத்து, தாங்கள் செய்கிற தவறுகளையும் நியாயப்படுத்திக் கொள்ளுவாங்க. அவங்கட பிள்ளைகளோடு எங்கட பிள்ளைகள் சேர்ந்து விளையாடவும் விடமாட்டார்களாம். ஆடிப்பாடி விளையாடினால், எங்கட பிள்ளையை அடிப்பாங்க. அடிச்சிப்போட்டு இல்லாத சாட்டுக்களைச் சொல்லி, எனது பிள்ளைக்கு கெட்டபேரை வாங்கித் தருவாங்க. இது என்ன வாழ்க்கை? இப்ப என்னுடைய பண்டா இருந்தா, எனக்கும் எனது பிள்ளைக்கும் இப்படியான இழி நிலை வந்திருக்குமோ? என்று தனக்குள்ளே அழுதுகொண்டே தனது ஐந்தடி இடத்துக்குள், பாயினைச் சுற்றிவைத்துவிட்டு வாடிய தோற்றத்துடன், வெளியில் வந்தாள். அதற்குள் அங்கு சுசியைக் காணவில்லை. அம்மா வெள்ளிக்கிழமை தொழலுக்குச் செல்வாள். அம்மாவுக்குத் துணையாகப் போகும் பிள்ளை இப்போது, அம்மா போகாத நாட்களில் தனியாகவே தனது தாயின் தொழிலை செய்துவிட்டு முகாமுக்கு திரும்புவாள்.

அன்று மதியம் முகாமிற்குத் திரும்பிய சுசி, கையில் ஒரு ராத்தல் பாணும், ஒரு ரூபாய் நாணயக்குற்றிகள் பத்தையும் கொண்டுவந்தாள். தாய் எதிர்க்கேள்வி கேட்கவில்லை. பத்துரூபாவிற்கு சம்பல்பை ஒன்றை வாங்கி, அன்றைய பொழுதைக் கழித்தனர்.

◇◇◇◇◇◇ ◇◇◇◇◇◇

நிலத்தில் கிடையாகக் கிடக்கும் மருதமரக் கட்டையில் இருவரும் நெருங்கியவாறு, யாருமில்லாத அந்தக்குளத்தங்கரையில், இருவரும் உல்லாசமாக இருந்தார்கள். பண்டாவின் அம்மாவின் விருப்பத்துடன் இருவருக்கும் திருமணம் நடந்து ஒரு மாதம் உருண்டோடியும் விட்டன. பண்டாவுக்கும் தாயை விட்டால், வேறு சொந்தமெதுவுமில்லை. அவளும் இன்றோ, நாளைக்கோ என்று பாரிசவாதம் வந்து படுத்த படுக்கையாகவே உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தாள்.

இருவரும் கொண்டுவந்த காதல் பரிசுகளைப், பரஸ்பரம் மரிமாறிக் கொண்டார்கள். பதிவுத்திருமணத்திற்குப் பின்னரே இவர்களது காதல் இன்னும் வலுவடைந்தது போல, காதலிக்கு உரிய அம்சங்களுடன் அவனுக்குக் காட்சியளித்த வாசுகி, முழங்கால் அளவில் அணிந்திருந்த அரைப்பாவாடை அதனால், இரண்டு கால்களிலும் கறுத்த முடிகள், அன்று முளைத்த நெல் அரும்புகள் போல, குளத்துக்குளிர்காற்றுக்கு சிலிர்த்து குத்தாட்டம் நின்றன. மெல்லிய உடலைக் கொண்டிருந்தாலும் அவளின் மார்பகங்கள் சற்றுப் பெருத்தே காணப்பட்டன. மெதுவாக பண்டா வாசுகியின் தோளில் கையைப் போட்டான். அவளுக்கும் ஏதோ மின்சாரம் பாய்ந்தது போல, உடல் சிலிர்ப்படைகின்றது. சிறிது நேரத்தில் அவர்களின் நெருக்கம் இன்னும் இறுகியது. பண்டா வாசு இருவரும் காதலின் கிறக்கத்தால், ஆளுக்கு ஆள் மாறி மாறி முத்த மழை பொழிந்தனர். இருவரும் உணர்ச்சி மேலீட்டால் மருதமரத்து இலைகள் மெத்தையாக அமைய, உருண்டு புரண்டு உச்ச இன்பத்தை அடைந்தார்கள். மூன்று உலகங்களை அவள் மூலம் கடந்த பண்டா, மீண்டும் ஓர் உலகைக்காண முயற்சி செய்யும் போது...



அவன் முதுகில் இரத்தம் வழி-கிறது, உடல் வாடியது, கண்கள் மூடி மூடித் திறந்தன. வாயிலிருந்து நுரை தள்ளியது. பண்டா மூர்ச்சையற்றிருந்தான். வாசுகி பதற்றமடைந்தாள். அலறினாள். அங்குமிங்கும் ஓடினாள். தன்னைச் சுதாகரித்துக்கொண்டு அவனைத் தூக்கினாள். நேரம் எவ்வாறு சென்றது என்று தெரியவில்லை. ஊர்சனம் கூடியது வாசுகியை திட்டிய மக்கள், பண்டாவைக் கொலைசெய்த கெ-ாலை காரியாக நினைத்து, ஊரைவிட்டு தள்ளிவைத்தனர். பண்டாவிற்கு என்ன நடந்தது என்பதை அறிய அவ்வூர் மக்கள் வாசுகியை விடவில்லை. பெரும் துன்பத்தைச் சுமந்த மனதுடனும், ஏக்கத்துடனும் இருந்த வாசுகி, இவனைத் தீண்டிய அந்தக் கரு நாகம் வளைந்து வளைந்து ஊர்ந்து செல்வதை அவதானித்தாள். அவ்விடத்தில் எதுவும் கதைக்க விரும்பாத வாசுகி, அன்றே அவ்வூரைவிட்டு வவுனியா பூந்தோட்ட முகாமை வந்தடைந்தாள். பண்டாவின் ஞாபகமாக இப்போது சுசி தமிழும், சிங்களமும் மாறி மாறிக் கதைக்கின்றாள்.

◇◇◇◇◇◇ ◇◇◇◇◇◇

அன்று வெள்ளிக்கிழமை, பொழுது விடிகின்றது. புள்ளினங்கள் முகாமுக்கு பக்கத்து அம்மன் ஆலயத்து கோபுரத்தில், உள்ளே போவதும், வெளியே வருவதுமாக இருந்தன. முகாமுக்குள் ஒவ்வொரு வீட்டில், ஒவ்வொரு சம்பவம் நடக்கின்றது. சில வீடுகளில் பக்திப்பாடல்கள் ஒலிக்கின்றன. சில வீடுகளில் செய்திகள் போகின்றன. இன்னும் சில வீடுகளில் சண்டை நடக்கின்றன. சில வீடுகளில் பாடசாலைக்குச் செல்வதற்காக மாணவர்கள் ஆயத்தமாகின்றனர். மேலும் சில வீடுகளில் அதிகாலையில் கசிப்புச் சண்டை. பொம்பளைச் சண்டை, மின்சாரச் சண்டை, இவ்வாறு பல வீடுகளில் பல சம்பவங்கள் நடக்கின்றபோதும், வாசுகியின் வீட்டில் மட்டும் அதே முதல்நாள் போராட்டம் முடிவடைந்தது. தாயும், மகளும் ஐந்தே முக்கால் மணியாகியும், இன்னும் தேநீர் கூட அருந்தாமல், (எப்படி தேநீர் அருந்துவது, பக்கத்து கடைக்காரி, சீனி கடனுக்குக் கொடுக்க, வாசுகி ஏதும் பணக்காரியா இல்லையே?) அம்மன் ஆலயம்.. பிள்ளையார் ஆலயம் எனப் பல ஆலயங்களுக்கும் இருவரும் கையில் ஒவ்வொரு பாத்திரத்துடன் பக்தர்கள் முன் நீட்டி நீட்டி சென்றார்கள்.

சுசி அளவிலான பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதைப் பார்த்து, வாசுகிக்கு மனதில் ஒருவித புழுக்கமும் ஆத்திரம் பொங்கியெழுந்தது. என்ன செய்வது? அவளால், ஆத்திரமடைவதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

◇◇◇◇◇◇ ◇◇◇◇◇◇

எப்படி இருந்தாலும், இன்று இருவருக்கும் கைநிறைய பணம், பெரிய பெரிய சாப்பாட்டுப் கடைகளில் விதவிதமான சாப்பாடு, வெள்ளிக்கிழமை வந்துவிட்டால், நிலத்தில் கிடக்கும் ஆகாயத்தாமரையைக் குளத்தில் தூக்கிப்போட்டால் அது எவ்வாறு செழிப்படைகின்றதோ, அதைப்போல் இருவரும் குளத்தில் மிதக்கும் ஆகாயத்தாமரையாகவே மாறி விடுவார்கள். இருந்தாலும் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்கள் எல்லாம் நிலத்தில் கிடக்கும் ஆகாயத்தாமரை...

வெள்ளிக்கிழமை கையில் கடிதம் கிடைத்தது. அன்று வியாழக்கிழமை பின்னேரம் அடுத்த நாள் காலை தனது வேலையை வவுனியா நீர்ப்பாசன திணைக்களத்தில் பொறுப்பெடுத்துவிட்டான். வேலை இடமாற்றம் கிடைத்து வந்தாலும், காணும் பெண்கள், அனை-வரும் அவனுக்கு வாசுகி போலவே தெரிந்தார்கள். பண்டாவிற்கு பிள்ளை இருக்கா என்பது கூட ஐயம். அது ஆணா பெண்ணா என்று கூட தெரியாது? அப்படியானால், அவனுக்கு எப்படி அந்தக் குழந்தைக்குத் தாய் சூட்டிய சுசி என்று தெரியப்போகிறது?

மாலை, விடுதியில் இருந்து தனது காரில் வாசுகியைக் காணலாம் என்ற எண்ணத்துடன் ஆசை ஆசையாய்ப் புறப்படுகின்றான்.

மாலை சூரியன் மெதுமெதுவாக மறைகின்றான். ஆலயத்தில் பூசை முடிந்தது. அனை-வருமே வீடு திரும்புகின்றனர்.

புள்ளினங்கள் இரை தேடலை முடித்துக்கொண்டு கூடுகளுக்கு திரும்புகின்றன. கல்வி நிலையங்களில் படிப்புக்களை முடித்துவிட்டு மாணவர்கள் வீடு திரும்புகின்றனர். தெரு விளக்குகள் விட்டு விட்டு எரிய தொடங்குகின்றன. கடைக்காரர்கள் மெதுமெதுவாக ஒவ்வொரு கதவாக பூட்டுகின்றனர். இவையெல்லாவற்றையும் இரசித்தவாறு மெதுமெதுவாக தனது காரை செலுத்துகின்றான் பண்டா.

கார் செல்லுகின்ற பாதையின் எதிரே கூப்பிடு தூரம் அளவில், ஒரு குறுக்குப்பாதையொன்ற இருந்தது. ஏதோ ஒரு சிந்தனை வந்தவனைப்போல காரை அந்தக் குறுக்குப் பாதைக்குள் வாசு, திரும்புகின்றான். காருக்கு எதிரே தோளில் துணி மூட்டையுடனும், அழுக்கு படிந்த உடையுடனும், ஒரு கையில் குழந்தையைப் பிடித்துக்கொண்டு, காரை நோக்கி ஓர் உருவம் நடுவழியிலேயே வருகிறது. அதற்குள் பண்டா காரை நிறுத்திவிட்டு இறங்கி...

வா..சு..கி, வாசு..நீ.. என்றதும், திகைத்துப்போய் நின்றாள்.

இனம் புரியாத ஒரு உணர்வினால் இருவரும் உந்தப்பட்டு கட்டியணைத்து ஆரத் தழுவிக்கொண்டனர். பின்னர் இருவரும் தங்களைச் சுதாகரித்துககொண்டு ...

சிறிது நேரம் அமைதியின் பின்னர்
ஏய் சுசி...இது...தான்...உண்...ட
அப்பாடா...

பண்டா, சு...சீ...யா... உன...க்குப் பேர் என்று அவளை ஆவலுடன் பாசத்துடன் கட்டி அணைத்தான்.


இப்போது மூவரும் நிரந்தரமாக குளத்தில் கிடக்கும் ஆகாயத் தாமரைகள் போல...
செழிப்பான வாழ்க்கையை அடைந்தனர். அவள் வாழ்ந்த குடிசை மாளிகையாகின்றது.
வழமான வாழ்க்கையுடன் சிறப்பான சமக அங்கீகாரத்துடன் அவர்களின் வாழ்க்கை இனிதாகத் தொடர்கின்றது.

முற்றும்.


ஆக்கம்:-
**புயல்.**
**பூந்தோட்டம்.**



# ஆன்மீக உலகம்



## அமெரிக்காவில் மிகப்பிரமாண்டமான இந்துக்கோயில்




அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மிகப் பிரமாண்டமான இந்துக் கோயில் கட்டப்பட்டுள்ளது. ஹொலிவூட் நகருக்கு மிக அருகில் அமைந்துள்ள இக்கோயில், தற்போது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. சுமார் 100 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில், அமைக்கப்பட்டுள்ள இக்கோயில், டிசம்பர் 23 ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது.

21 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோயிலின் திருப்பணிகள், 2009 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. ஆன்மீகத் தலமாக மட்டுமன்றி, இந்தியாவின் பாரம்பரிய கட்டடிடக் கலைகள், கலாச்சாரங்கள் ஆகியவற்றுக்கு, மிகப் பெரிய சான்றாகவும், அடுத்த 1000 ஆண்டுகளுக்கு, பிரமாண்டத்தை ஏற்படுத்தும் விதமாகவே, இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் அமைப்பதற்காக, 10 கப்பல்களில் இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து, மாபிள் கற்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

நக்ரதி என்னும் கட்டிடக்கலை வகையில் அமைக்கப்பட்டுள்ள இக்கோயிலைச் சுற்றி, கண்ணுக்குக் குளுமைசேர்க்கும் மிகப்பெரிய தோட்டமும், நீரூற்றும் அமைக்கப்பட்டுள்ளது. 35000 பளிங்கு மற்றும் மாபிள் கற்களால் அமைக்கப்பட்டுள்ள இக்கோயில், சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், நில அதிர்வுகளால் பாதிப்பு ஏற்படாத வகையிலும், தலைசிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது.

5 கூரிய கோபுரங்கள், 2 மிகப்பெரிய மாடங்கள், 4 மாடிகள், 122 தூண்கள், 21 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோயிலின் முன்புறம், 91 தாமரை வடிவைப் பிரதிபலிக்கும், கண்காணிகளைக் கொண்ட நீரூற்று அமைந்துள்ளது. இக்கோயில் கலாச்சாரக் கூடம், உடற்பயிற்சி நிலையம், வகுப்பறைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

## அல்லாஹ்வின் பண்புகளை விவரிக்கும் அல்குர்ஆன் வசனங்கள்



அவனே முதலாமவன் அவனே இறுதியானவனும் கூட. அவனே வெளிப்படையானவன். அவனே மறைவானவனும், அவனே ஒவ்வொன்றையும் நன்கறிந்தவன் (ஸூரா அல்ஹதீது)

மறைவானவற்றின் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. அவற்றை அவனேயன்றி வேறொருவரும் அறியார். தரையிலும் கடலிலும், உள்ளவைகளையும் அவன் நன்கறிவான். அவன் அறியாமல் யாதொரு இலையும் உதிர்வதில்லை. பூமியின் (ஆழத்தில்) அடர்ந்த இருளில் (புதைந்து) கிடக்கும் (கடுகு போன்ற சிறிய) வித்தும், பசுமையானதும் உலர்ந்ததும் அவனுடைய தெளிவான (பதிவு) புத்தகத்தில் இல்லாமல் இல்லை. (ஸூரா ஆன்ஆம் 6:59)

அவனறியாமல் யாதொருவன் கர்பமாவதும் இல்லை. பிரசவிப்பதும் இல்லை. (ஸூர.ஃபாதிர் 35:11) அல்லாஹ் தான் 7 வானங்களையும், இன்னும் பூமியிலிருந்து அவற்றைப்போலவும் படைத்தான், நிச்சயமாக அல்லாஹ் எல்லாப்பொருட்கள் மீதும், சக்தியுடையவன் என்பதையும், மேலும் நிச்சயமாக அல்லாஹ் தன் ஞானத்தால் எல்லாப்பொருளையும் சூழ்ந்தறிகிறான்.

என்பதையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக, அவற்றின் (வானங்கள், பூமியின்) இடையே அவன் கட்டளை இறங்கிக்கொண்டே இருக்கிறது. (ஸூரா அத்தலாக் 65:12)

மேலும் எம்முடைய இறைவன், அவர்களுடைய இருதயங்கள் மறைத்து வைப்பதையும், அவர்கள் வெளிப்படுத்துவதையும் நன்கறிவான். (ஸூரா அல்கஸஸ் 28:69) (நபிஸல) அவர்கள் கூறினார்கள் யா அல்லாஹ் ஏழு வானங்கள் பூமியின் ரப்பே! மகத்தான அர்ஷின் ரப்பே! எங்களது ரப்பே! ஒவ்வொரு வஸ்துவின் ரப்பே வித்துக்களையும், தானியங்களையும் உடைப்பவனே! தவ்ராத், இன்ஜீல்,குர்ஆனை இறக்கியவனே!

உன்னிடம், எனது நஃப்ஸின் தீங்கிலிருந்தும் நீ உச்சிமுடியை பிடித்துள்ள ஒவ்வொரு ஊர்ந்து செல்லும் பிராணியின் தீங்கிலிருந்தும் பாதுகாவல் தேடுகிறேன். நீயே முதலாம் அவன் உனக்குமுன்பு எதுவும் இல்லை நீயே முடிவானவன்.

உனக்குபின்பு எதுவுமில்லை நீ வெளிப்படையானவன், உனக்குமேல் எதுவுமில்லை, நீயே மறைந்தவன், உன்னை விட்டும் (மறைந்தது) எதுவுமில்லை என்சார்பாக கடன் அனைத்தையும் நிறைவேற்றிவிடு ஏழ்மையிலிருந்து (இரட்சித்து) என்னை பிறரின் தேவையற்றவனாக ஆக்கிவிடு! (ஸஹீஹ்முஸ்லிம்)


**மேற்கூறப்பட்ட சம்பவம் மூலம் தெரிந்து கொள்வதாவது:**

01.அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன்

02.இப்பிரபஞ்சத்தில் உள்ள எந்த ஒன்றும் அவனது அறிவிலிருந்து தப்பமுடியாது

03.வானங்களில் உள்ளதையும் பூமிக்கு கீழ் உள்ளதையும், வானம் பூமிக்கு கீழ் உள்ளதையும் அவன் பூரனமாக அறிந்தே இருக்கிறான்.

## பத்து கற்பனைகளில் முதலாவது கற்பனை



பிதாவாகிய தேவன் மோசேயின் மூலம், இஸ்ரவேல் ஜனத்திற்குப் பத்துக் கற்பனையைக் கொடுத்தார். அதில் முதலாவது கட்டளைதான், என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்,

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான, ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். என்று வேதாகமம் எச்சரிக்கின்றது. (யாத்திரையாகமம் - 20:3,4)

ரோமன் கத்தோலிக்க வேதாகமம் பின்வருமாறு கூறுகிறது. என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியில் கீழே மண்ணுலகில் பூமிக்கடியே நீர்த்திரள்களில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பனிவிடை புரியவோ வேண்டாம். (விடுதலைப் பயணம் - 20:3,5) என்று கூறுப்பட்டுள்ளது.

இயேசுவுக்கு நேரிட்ட சோதனையிலும் கூட மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமைகளையும் அவருக்குக் காண்பித்து, நீர் சாஸடாங்கமாக விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.

அப்பொழுது இயேசு, அப்பாலே போ சாத்தானே. உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். ஆராதனைக்குரியவர் மகிமைக்குரியவர் மகிமைப்படுத்தப்படவேண்டியவர் இயேசு கிறிஸ்துவே. எல்லாத் துதி, கனம், மகிமைக்குரியவர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே.

இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாரையும் வழிபடவோ. போற்றவோ, துதி செய்யவோ, ஆராதனை செய்யும் படியோ சொல்லப்படவில்லை. முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாக்குகள் யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் (ஏசாயா 45:23) இயேசுவின் நாமத்தில், வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக, இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும் எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:10,11) என்று தான் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

சிலர் இயேசுவே கடவுள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ள மனதற்றவர்களாய் இருப்பதனால், வேறு தேவர்களுக்கும் விக்கிரகங்களுக்கும், ஆராதனை செய்து விழா எடுக்கிறார்கள். நான் கர்த்தர் இது என் நாமம். என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன், என்று கர்த்தர் கூறுகிறார். (ஏசாயா 42:8)


நியாய சாஸ்திரி ஒருவன், இயேசுவைச் சோதிக்கும் படி, போதகரே நியாயப் பிரமாணத்திலே, எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில், முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்பு கூறுவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை (மத்தேயு 22:35,38) என்று கூறுகிறார்.

ஆகவே முதலாவது கட்டளையின் படி, ஒரே சர்வேஸ்வரனை முழுமனதுடனே ஆராதிக்கும்படி, முதலாவது கட்டளையைப் பற்றிக்கொள். உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக. எல்லாத் துதிகளும் மகிமை யாவற்றையும் இயேசு கிறிஸ்துவுக்கே செலுத்துவாயாக.


அப்போது அவர் தமது வல்லமையுள்ள ஆணிகள் பாய்ந்த கரத்தை நீட்டி, நிச்சயமாய் உன்னை ஆசீர்வதிப்பார். பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். நானே தேவன் வேறொருவரும் இல்லை. (வசாயா : 45:22) ‘‘என்க்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை, எனக்குப் பின் இருப்பதுமில்லை”

‘‘நான் நானே கர்த்தர் என்னையல்லாமல் இரட்சகர் இல்லை (ஏசாயா 43:11) நானே அறிவித்து, இரட்சித்து விளங்கப் பண்ணினேன் உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன் இல்லை நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள், நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கின்றேன் என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை. நான் செய்கிறதைத் தடுப்பவன் யார் என்று கர்த்தர் சொல்லுகின்றார்.

(ஏசாயா 43: 12,13)



# அறிவியல் உலகம்



## மருத்துவச் செய்திக் குறிப்புக்கள் சில ...

### உடல் சூட்டுக்குத் தைலம்

அகத்திக் கீரைச் சாறும், நல்லெண்ணெயும் சமமான அளவு எடுத்து, சூடாக்கி அதில் வெந்தயத்தையும், பசுப் பாலையும் சேர்த்து, தைலப் பதமாகக் காய்ச்சி, அதை தலையில் தேய்த்து வந்தால், சூடு தணிந்து உடல் குளிர்ச்சியாகும்.

### மூலம் தீர்க்கும் ஆவாரை

ஆவாரங்கொழுந்து, ஆவாரம் பட்டை, அறுகன் வேர், இலைகளை சமவளவு எடுத்து உலர்த்தி சூரணம் செய்து, 2 வேளை தேனில், நெய்யில் குழைத்து உண்டுவர மூலநோய் குணமாகும்.

### கைநடுக்கம் தீர

தூதுவளை இலையை மை போல அரைத்து, சுண்டைக்காயளவு காலை,, மாலை இருவேளை, பசும்பாலில் 15 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டுவர கைநடுக்கம் தீரும்.

### இருமல் தீர

இலவங்கப்பட்டை ஒரு மேசைக்கரண்டி, வால்மிளகு கால் மேசைக்கரண்டி பொடியாக்கி, மூன்று வேளை நெய்யில் குழைத்து, சாப்பிட்டு வர இருமல் தீரும்.

### காதில் சீழ் வருதல் தீர

இந்துப்பு, சுக்கு என்பன சமஎடை எடுத்து பொடியாக்கி, வெண்ணெயில்ப் போட்டுக் காய்ச்சி, 4 முதல் 5 முறை காதினுள் விட சீழ் வடிதல் தீரும்.

### உடல் எடை அதிகரிக்க

பூசனி விதையின் பருப்பை எடுத்து, நன்கு பொடியாக்கிக் காய்ச்சிய பாலில் கலந்து, தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் எடை கூடும்.

### சீதக் கடுப்புக்கு

மாவிதையின் பருப்பை அரைத்து, பாலில் கலக்கி உண்டுவர இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பு இவை அனைத்தும் குணமாகும்.

### தலைமுடி கறுக்க

கரியபாவத்தை நெல்லிக்காயின் சாற்றுடன் அரைத்து, தொடர்ந்து பூசி வந்தால் தலைமுடி கறுத்து வளரும்.

### இருமல் தீர

கற்பூரவள்ளிச் சாற்றில், கற்கண்டுத் தூள் ஒரு சிட்டிகை போட்டு, சாப்பிட்டு வந்தால் தொண்டை இருமல் நிவர்த்தியாகும்.

## இரத்தத்தை உற்பத்தி செய்யும் வெந்தயக்கீரை




வெந்தயக் கீரையில் அதிகளவு விற்றமின் ஏ சத்தும், சுண்ணாம்புச் சத்தும் காணப்படுகிறது. வெந்தயக் கீரையைப் பொடியாக, நறுக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு, வதக்கி இரண்டு டம்ளர் தண்ணீர் விட்டு, ஒரு டம்ளர் அளவிற்கு சுண்டக்காய்ச்சி, காலை, மாலை அரை டம்ளர் வீதம் குடித்து வந்தால், நெஞ்சுவலி பூரணமாகக் குணமாகும்.

உடலுக்கு நல்ல பலனைத் தருவதோடு, புதிய இரத்தத்தையும் உற்பத்தி செய்யும். வெந்தயக்கீரையின் வேரை நீக்கி, கழுவி ஒரு பாத்திரத்தில் போட்டுச் சிறிதளவு தண்ணீர் விட்டு, நன்றாக வேகவைக்க வேண்டும்.

பின்னர் வெந்தயக்கீரை இருக்கும் அளவில், இரண்டு பங்கு கோதுமை ரவையை எடுத்து, லேசாக வறுத்து கீரையுடன் சேர்த்து, எல்லாம் எந்த அளவிற்கு இருக்கிறதோ, அந்த அளவிற்கு சர்க்கரை சேர்த்து, இலேசாகக் கிளறிக்கொண்டே இருந்தால், அல்வா போல வரும். இந்தச் சமயம் அதேயளவு நெய்யையும் விட்டுச் சிறிதளவு பால் சேர்த்துக் கடைந்து, ஓர் ஏலக்காயைத் தட்டிப்போட்டு கலக்கி வாயகன்ற சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு உபயோகப்படுத்தலாம்.

இந்த அல்வாவைகாலை, மாலை ஒரு உருண்டையளவு சாப்பிட்டு வந்தால், உடல்சூடு தணிந்து விடும். வெந்தயக் கீரையில் 49 கலோரி சத்துள்ளது. வெந்தயக் கீரையுடன், பாசிப்பயறு சேர்த்து குழம்பு வைத்துச் சாப்பிட்டால், கல்லீரல் பலப்படுகிறது. வயதுக்கு வரும் பெண்கள் இதைச்சாப்பிட்டால், இரத்தம் விருத்தியடையும். சொறி, சிரங்கு, இரத்தச்சோகை ஆகியவை குணமடையவும்.

## காலையில் புகைபிடிப்பது உடலுக்குக் கேடாம்




பொதுவாகவே சிகரெட் பிடிப்பது, உயிருக்கு உலை வைக்கக்கூடிய, ஆபத்தான பழக்கம் என்று மருத்துவர்கள் எச்சரிப்பது ஒருபுறமிருக்க, காலையில எழுந்தவுடன், புகைபிடிப்பதென்பது எமனை வரவழைப்பதற்குப் சமன் என எச்சரிக்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

இது தொடர்பாக, அமெரிக்க மருத்துவக் கல்லூரி ஒன்று நடத்திய ஆராய்ச்சியில், காலையில் எழுந்ததும் புகைபிடிப்பதனால் நுரையீரல், கழுத்து மற்றும் தலையில் புற்றுநோய் வருவதற்கான ஆபத்து, மிக அதிகமாக உள்ளதாகத் தெரிய வந்துள்ளது. புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்களில், பலர் காலையில் எழுந்ததுமே மலசலகூடத்துள் புகுந்து கொள்வார்கள். உள்ளே போய் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தால் தான், அவர்களுக்கு காலைக் கடனே கழியும்.

சிலர் இதனைப் பெருமையாக வேறு சொல்லிக்கொள்வார்கள். அத்தகைய தம்பட்டம் அடிப்பவர்களுக்குத்தான் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்,

## பைல்களை 3 gb யிலிருந்து 4mb யாகக் குறைக்க



இன்றைய அறிவியல் உலகில் எந்தவொரு வேலையையும் ஆறுதலாகச் செய்ய முடியாத வகையில் எமது வாழ்க்கை போகிறது. எந்தவொரு பொருளையும் எமது தேவைக்கு ஏற்றமாதிரி பயன்படுத்த நவீன தொழிநுட்பத் துறையானது வழிவகுக்கிறது.

அந்த வகையில் தான் பெரிய உயியஉவைல கொண்ட அதாவது புடீ வரிசையில் உள்ள பைல்களை அல்லது மென்பொருட்களை சிறிய உயியஉவைல கொண்ட பைல்களாக அதாவது ஆடீயாக மாற்ற முபுடீ யுசஉாளைநச எனும் மென்பொருள் பயன்படுகிறது. மென்பொருளானது இலவச மென்பொருள் என்பது மகிழ்ச்சி தரக்கூடிய விடயமே.

KGB Archiver ஆனது நம்ப முடியாத உயர் Compression Rate இல் GB இல் இருந்து MB ஆக மாற்றுகிறது. இந்த மென்பொருளானது யுநுளு -256 Encryption எனும் முறையைப் பயன்படுத்தி நுஉெசனிவ செய்யப்படுகிறது.

இந்த மென்பொருளை கணனியில் ஏற்ற 1.5GHz clock Speed, 256MB RAM கணனி போதுமானது. KGB ArchiverI பயன்படுத்தி ணுனி file ஆகவும் KGB file format ஆகவும் மாற்றமுடியும்.

இங்கு KGB file format ஆனது KGB ArchiverDila சொந்த file format ஆகும். மேலதிகமாக எமக்கு விரும்பிய Compression Algorithm யும் தெரிவு செய்ய முடியும். றுiனெழறள Vista மென்பொருளை 4MB ஆக Compress பண்ணியது என்றால் நம்புவீர்களா?

## firefox உலாவியின் புத்தம் புதிய பதிப்பு

விரைவான தேடல் உட்பட, பல அம்சங்களை உள்ளடக்கியதன் காரணமாக அதிகளவு பயனர்களால் பயன்படுத்தப்பட்டுவரும் கசைநகழஒ உலாவியின் புதிய பதிப்பினை Mozilla நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அதாவது கசைநகழஒ19 எனும் பெயருடன் கணனிகள் மற்றும் அன்ரோயிட் கைபேசிகளில் பயன்படுத்தக்கூடியவாறு வெளியிடப்பட்ட இப்புதிய பதிப்பில் ர்வுஆடு5 மொழியில் உருவாக்கப்பட்ட ீனுகு ஏறைறநச வசதியும் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்புதிய பதிப்பினை றுiனெழறள, ஆயஉ ழுளு டுiரெஒ ஆகியவற்றில் நிறுவி பயன்படுத்தக்கூடியவாறு வெளியிடப்பட்டுள்ளதுடன் அன்ரோயிட் கைபேசிகளில் நிறுவுவதற்கு அவை குறைந்தபட்சம் 600ஆாண ிசழஉநளளழைச, 512 ஆடீ சுயஅ மற்றும் ர்ஏபுயு ஆகியவற்றினைக் கொண்டிருக்க வேண்டும்.

## பயனாளர்களுக்கு புத்தம் புதிய வசதி




மின்னஞ்சல் அனுப்பும் நபர்களுக்கு பெரிய தடையாக இருந்தது பொியளவிலான கோப்புக்களை இணைத்து அனுப்புவதுதான். ஆனால் தற்போது அந்த வசதியை ஏற்படுத்தித் தந்துள்ளது கூகுள்.

இனிமேல் 10ஜிபி வரையிலான கோப்புக்களை இணைத்து அனுப்ப முடியும். இது வழக்கமாக அனுப்பும் அளவைவிட 400 மடங்கு அதிகமாகும். ஜிமெயிலில் அதாவது கூகுள் ட்ரைவில் உள்ள கோப்பை 10ஜிபி வரைக்கும் அனுப்பலாம் என அறிவித்துள்ளது கூகுள் நிறுவனம்.

## எரிபொருள் இல்லாமல் வானில் பறக்கும் விமானம்

சோலார் இம்பல்ஸ் என்ற மிகப்பெரிய சூரிய ஒளியால் பறக்கும் புதிய ரக விமானம் ஐரோப்பாவில் இருந்து ஆப்ரிக்காவுக்குப் பறந்து சென்றது. ஸ்பெயினின் மேட்ரிட் நகரிலிருந்து புறப்பட்டு 20மணிநேரம் பறந்து ஆப்பிரிக்காவின் மொராக்கோ நகரை அடைந்தது.

இதன் விமானியான சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பெட்ராண்டு பிக்கார்டு இந்தப் பயணம் என் நீண்டநாள் கனவு என்று கூறி மனிழ்ந்தார். சிறுவயது முதல் எரிபொருளில்லாத விமானத்தை ஓட்டுவதே அவருடைய கனவாக இருந்தது. இவர் இந்த உலகை ஒருமுறை பலூனில் மிதந்தபடி சுற்றி வந்துள்ளார். ஒரே ஒரு இருக்கை மட்டுமே கொண்ட இந்த விமானத்தில் 12.000சூரிய செல்களைக் கொண்டது. இதன் எடை ஒரு சிறிய காரின் அளவு தான் இருக்கும். இரவிலும் பறக்கும் வகையிலும் சூரிய செல்கள் மின்னூட்டம் பெற்றுள்ளன. சூதரியசக்திப் பயன்பாடு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டத்தைத் தாம் தொடங்கியதாக பிக்கார்டு தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்திலிருந்து பிச்சார்டு இந்த விமானத்தை மேட்ரிட் நகரத்திற்கு மே மாதமே கொண்டு வந்து விட்டார். ஆனால் தட்பவெப்ப நிலை காரணமாக உடனே பறக்க இயலவில்லை. மேட்ரிடில் இருந்து மொரோக்காவுக்கு 2500கி.மீ.தூரம் இந்த விமானம் பறந்துள்ளது. 2014ஆம் ஆண்டில் இந்த விமானம் இன்னும் மேம்படுத்தப்படும். இப்போது பறந்த விமானம் 2003ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. இதற்கு நூறு மில்லியன் செலவாயிற்று. 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த விமானம் தயாரித்து முடிக்கப்பட்டது.

# விளையாட்டு உலகம்




## பெடரர், முர்ரே அபாரம்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ், ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், சுவிற்சர்லாந்தின் பெடரர், இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே உள்ளிட்ட, முன்னணி நட்சத்திரங்கள் வெற்றி பெற்றனர். கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற, அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர், மெல்போனில் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், உலகின் ''நம்பர்-2'' வீரரான பெடரர், பிரான்சின் பெனாய்ட்டை சந்தித்தார்.

இதில் துவக்கம் முதல் சிற்ப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பெடரர், 6-2, 6-4, 6-1, என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே, நெதர்லாந்தின் ராபனை 6-3, 6-1, 6-3, என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி, அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில், பிரான்சின் சோங்கா, சக வீரர் மைக்கேலை, 6-4, 7-5, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வென்றார். பிற முதல் சுற்றுப்போட்டிகளில், ஆர்ஜென்டீனாவில் ஜுவான் டெல்போட்ரோ, அவுஸ்திரேலியாவின் ஜேம்ஸ் டக்வெர்த், இத்தாலியின் ஆண்டிரியாஸ் செப்பி, ஜேர்மனியின் புலோரியன் மேயர் ஆகியோர் வெற்றி பெற்று, 2வது சுற்றுக்குள் நுழைந்தனர்.

## செரினா காயம்



பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ருமேனியாவின் எடினா ஹாலை சந்தித்தார். போட்டியின் 19வது நிமிடத்தில், வலது கணுக்காலில் ஏற்பட்ட காயத்தால் செரினா அவதிப்பட்டார். மருத்துவ சிகிச்சைக்கு பின் சிறப்பாக செயற்பட்ட செரினா, 6-0, 6-0 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று, அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் பெலாரசின் விக்டோரியா அசரன்கா, ருமேனியாவின் மோனிகாவை 6-1, 6-4 வீழ்த்தினார். மற்றைய போட்டிகளில், டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, ஸ்பெயினின் கார்லா நவாரோ, செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, ரஸ்யாவின் எலினா, இத்தாலியின் ராபர்டா வின்சி ஆகியோர் வெற்றி பெற்று, 2வது சுற்றுக்குள் நுழைந்தனர்.

## கேப்டன் பதவியில் நீடிக்கலாமா? தோனிக்கு அட்வைஸ்



''இளம் வீரர்களுக்கு வழி விட்டு, ''டுவென்டி-20'' அணியின் கேப்டன் பதவியில் இருந்து, தோனி விலக வேண்டும்,'' என, பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர், ரமீஸ் ராஜா தெரிவித்தார். ''டுவென்டி-20'' உலக கோப்பை போட்டியின் முதல்க் கோப்பையை, இந்திய அணிக்கு முதன் முறையாக (2007) வென்று தந்தவர் கேப்டன் தோனி, தொடர்ந்து கேப்டன் பணியில் ஜொலிக்கும் இவர், 2010இல் ஐ.பி.எல்., மற்றும் சாம்பியன்ஸ் லீக், 2011இல் ஐ.பி.எல்., என, மூன்று முறை உள்ளூர் ''டுவென்டி-20'' போட்டிகளில், சென்னை அணிக்காக கோப்பை வென்று கொடுத்தார் தவிர, 2008, 2012 இல் பைனல், 2009இல் அரையிறுதி வரை அணியைக் கொண்டு சென்றார்.

இவரது பலமே ''டுவென்டி-20'' தான். அப்படி இருக்கையில், சமீபத்தில் டிராவிட் கூறுகையில், ''ஒருநாள் மற்றும் ''டுவென்டி-20'' அணியின் கேப்டன் பதவியில் இருந்து டோனி விலக வேண்டும்,'' என்றார். இந்த வரிசையில் இப்போது ரமீஸ் ராஜாவும் இணைந்தள்ளார்.

ரமீஸ் ராஜா கூறியது:

இந்திய ''டுவென்டி-20'' அணி முன்னேற்ற வேண்டுமெனில், கேப்டன் பதவியில் இருந்து தோனி தனாக முன்வந்து விலக வேண்டும். அப்போது தான் இளம் வீரர்கள், கேப்டன் பணிக்கு தயாராக முடியும்.

கேப்டன், நல்ல நிர்வாகிகள் என்பவர்கள், அணியின் நலனுக்காக கடின முடிவுகளை எடுக்கத் தயங்கக் கூடாது. இந்தியாவைப் பொறுத்த வரையில், ரசிகர்கள் புள்ளிவிபரங்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார். இந்தியா, பாகிஸ்தான் அணிகள் எத்தனை போட்டிகளில் வென்றுள்ளது எனப் பார்ப்பதில்லை. இவ்வாறு ரமீஸ் ராஜா கூறினார்.

## பாகிஸ்தான் பெண்கள் அணிக்கு சிக்கல்


பெண்கள் உலகக் கோப்பைத் தொடரில் பங்கேற்கும், பாகிஸ்தான் கிறிக்கட் அணிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குப்பின், ஐந்து ஆண்டுகள் கழித்து சமீபத்தில் தான் பாகிஸ்தானுக்கு எதிரான கிறிக்கட் தொடர் இந்தியாவில் நடந்தது. இது முடிந்த சில நாட்களில், எல்லைப்பகுதியில் இரு இராணுவ வீரர்கள் பாகிஸ்தான் இராணுவத்தினரால் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

இதனால் பாகிஸ்தானுக்கு எதிரான எதிர்ப்பு மீண்டும் வலுப்பெற்றது. ஹொக்கி லீக் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் வீரர்களுக்கு, பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பாகிஸ்தான் வீரர்கள் தங்களது முகாமை, மும்பையிலிருந்து மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனடையே, வரும் 31ஆம் திகதி முதல், பெப்ரவரி 17வரை 8அணிகள் பங்கேற்கும் பெண்கள் உலகக் கோப்பை கிறிக்கட் தொடர், மும்பையில் நடக்கவுள்ளது.

இதற்கான பாகிஸ்தான் பெண்கள் அணி ஜனவரி 26இல் இந்தியா வரும்போது, எதிர்ப்பு அதிகமாகுமெனத் தெரியவருகிறது. இதனால் பாகிஸ்தான் அணி பங்கேற்கும் போட்டிகளை, எங்கு நடத்துவதென்பதில் சிக்கலேற்ப்பட்டுள்ளது.

இது ஐ.சி.சி நடத்தும் தொடர் என்பதால், இடங்களைத் தேர்வு செய்யும் வேலையை, ஐ.சி.சியிடம் விட்டுவிட இந்திய கிறிக்கட் போர்ட் முடிவு செய்தது. பி.சி.சி.ஐ தலைவர் சீனிவாசன் கூறுகையில், இங்குள்ள சூழல் குறித்து ஐ.சி.சியிடம் தெரிவித்துவிட்டோம். அவர்கள் இறுதி முடிவு எடுப்பார்கள் எனத் தெரிவித்தார்.

## ஆனந்த் முன்னேற்றம்



டாடா ஸ்டீல் செஸ் தொடரின், நான்காவது சுற்றில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் வெற்றி பெற்றார். நெதர்லரந்தில் உள்ள விஜ்ஆன் நகரில், 75வது டாடா ஸ்டீல் செஸ் தொடர் நடக்கிறது. இதன் ''ஏ'' பிரிவின் நான்காவது சுற்றில் ஆனந்த், உலகின் ''நம்பர்-2'' வீரரான ஆர்மினியாவின் ஆரோனியனைச் சந்தித்தார்.

இதில் கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய ஆனந்த், 23வது காய் நகர்த்தலின் போது வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம், புள்ளிப்பட்டியலில் ஆனந்த் (3 புள்ளி) முதல் இடத்தை நார்வேயின் கார்ல்சன், ரஷ்யாவின் செர்ஜி கர்ஜாகின் ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார்.

மற்றொரு போட்டியில், இந்தியாவின் ஹிரிகிருஸ்ணா, உலகின் ''நம்பர்-1'' வீரரான நார்வேயின் கால்சனை சந்தித்தார். இதில் கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய ஹிரிகிருஸ்ணா, 49வ நகர்த்தலின் போது தோல்வியடைந்தார்.

## சச்சின், அபிஷேக் அரைசதம்: மீண்டது மும்பை

சர்வீசஸ் அணிக்கு எதிரான, ரஞ்சி கோப்பை அரையிறுதியில் ச்சின், அபிஷேக் நாயர் அரைசதம் அடிக்க, மும்பை அணி சரிவிலிருந்து மீண்டது. மும்பை, சர்வீசஸ் அணிகள் மோதும் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரின், அரையிறுதிப் போட்டி டில்லியில் நடக்கிறது. 'டொஸ்ஸில்'' வென்ற மும்பை அணி கேப்டன் அஜித் அகார்கர், பேட்டிங் தேர்வு செய்தார்.

### ஜாபர் ஏமாற்றம்:

முதலில் ''பேட்'' செய்த மும்பை அணிக்கு, வாசிம் ஜாபர்(15), கவுஸ்துப்பவார்(3) மோசமான துவக்கம் கொடுத்தனர். அடுத்து வந்த ஹிகன் ஷா, ''டக் அவுட்'' ஆனார்.

### சச்சின் நம்பிக்கை:

பின் இணைந்த ''மாஸ்டர் பேட்ஸ்மேன்'' சச்சின், அபிஷேக் நாயார் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. பொறுப்பாக ஆடிய சச்சின், அரைசதம் அடித்தார். நான்காவது விக்கெட்டுக்கு 81 ரன்கள் சேர்த்த போது சச்சின்(56) அவுட்டானார். அடுத்து களம் இறங்கிய ஆதித்யா தாரேவுடன் இணைந்த அபிஷேக் நாயர், தன்பங்கிற்கு அரைசதம் அடித்தார். ஐந்தாவது விக்கெட்டுக்கு 65 ரன்கள் சேர்த்த போது அபிஷேக் நாயர்(70) அவுட்டானார்.

அன்கீத் சவான், ''டக்-அவுட்'' ஆனார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில், முதல் இனிங்சில் மும்பை அணி, 6 விக்கெட்டுக்கு 199 ரன்கள் எடுத்திருந்தது. ஆதித்யா தாரே(26), அகார்கர்(17) அவுட்டாகாமல் இருந்தனர். சர்வீசஸ் அணி சார்பில் சுராஜ் யாதவ், ஷதாப் நாசர் தலா 2, நிஷான் சிங், அபிஷேக் சின்கா தலா ஒரு விக்கெட் கைப்பற்றினார்.

### சவுராஷ்டிரா அபாரம்

ராஜ்கோட்டில் நடக்கும் மற்றொரு அரையிறுதியில் சவுராஷ்டிரா, பஞ்சாப் அணிகள் விளையாடுகின்றன. ''ரொஸ்ஸில்'' வென்று முதலில் ''பேட்'' செய்த சவுராஷ்டிரா அணிக்கு, ஷடான்சு கோடாக்(54) நல்ல துவக்கம் கொடுத்தார். கேப்டன் ஜெயதேவ் ஷா, (87), ஷெல்டன் ஜாக்சன் (70ழூ) நம்பிக்கை தந்தனர். முதல் நாள் ஆட்ட நேர முடிவில், முதல் இனிங்சில் சவுராஷ்டிரா அணி 5 விக்கெட்டுக்கு 274 ரன்கள் எடுத்திருந்தது. பஞ்சாப் சார்பில் சித்தார்த் 2, ஹர்பஜன் சிங், பிபுல் சர்மா, தருவார் ஹோக்லி தலா ஒருவிக்கெட் வீழ்த்தினார்.

## செய்னா வெற்றி



மலேசிய ஓபன் பாட்மின்டன் தொடரின் முதல் சுற்றில், இந்தியாவின் செய்னா நேவல் வெற்றி பெற்றார்.

கோலாலம்பூரில் மலேசிய ஓபன் பாட்மின்டன் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில், இந்திய நட்சத்திர வீராங்கனை செய்னா நேவல், சிங்கப்பூரின் ஜுவான் ஜுவை சந்தித்தார்.

துவக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய செய்னா, முதல் செட்டை 21-12 என வென்றார். தொடர்ந்து இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய செய்னா, 21-15 என கைப்பற்றினார். முடிவில், செய்னா 21-12, 21-18, 17-21 என்ற கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.


### அஷ்வினி அபாரம்

பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஷ்வினி பொன்னப்பா, பிரத்னயா காத்ரே ஜோடி சிங்கப்பூரின் யூ யான், டெல்லிஸ் ஜோடியை 20-22, 21-16, 21-15 என்ற செட்களில் வென்றது.

மற்றொரு போட்டியில் இந்தஜயாவின் அபர்ணா பாலன், சிகி ஜோடி, இங்கிலாந்தின் ஹெத்தா ஆல்வர், கேட் ராபர்ட்ஷா ஜோடியைச் சந்தித்தது. இதில் முதல் செட்டை 21-11 என, சிகி ஜோடி வென்றது. இரண்டாவது செட்டில் 3-4 என பின்தங்கியிருந்த போது காயம் காரணமாக சிகி ஜோடி பாதியில் போட்டியில் இருந்து விலகியது.

# உலகச் செய்திகள்

## உலகம் போராட்டம் நடத்தும் காத்ரியைக் கைது செய்ய பாக்.அரசு உத்தரவு



பாகிஸ்தானில் , உண்மையான ஜனநாயகம் கோரி, போராட்டம் நடத்தி வரும், தாகிர் உல்-காத்ரியைக் கைது செய்ய, பாக் அரசு உத்தரவிட்டுள்ளது. ஊழல் விவகாரத்தில் சிக்கிய, பாகிஸ்தான் பிரதமர், அஷ்ரப்பை கைது செய்யும் படி, அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே, ''பாகிஸ்தானில் ஊழல் பெருத்து விட்டதால், பாகிஸ்தான் அரசு உடனடியாக பதவி விலக வேண்டும்'' என, ''தேரிக்-மின் ஹஜ்-உல்-குர்ரான்' கட்சியின் நிறுவனர், தாகிர் உல்-காத்ரி, கடந்த, மூன்று நாட்களாக தொடர் போராட்டம் நடத்தி வருகிறார். சூபி அமைப்பின் தலைவரான காத்ரி, கடந்த ஏழு ஆண்டுகளாக, கனடா நாட்டில் வசித்து வந்தார்.

பாகிஸ்தானில் உண்மையான ஜனநாயகம் அமைய, தேர்தல் சட்டங்களில் திருத்தம் செய்ய வேண்டும். தற்போதைய ஊழல் அரசு, நள்ளிரவுக்குள் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால், எகிப்து, துனிசியா, ஏமன் உள்ளிட்ட நாடுகளை போல, பாகிஸ்தானிலும், தொடர் கிளர்ச்சியில் ஈடுபடுவோம்," என, காத்ரி எச்சரித்துள்ளார். தொடர்ந்து மூன்று நாட்களாக, இவர் போராட்டம் நடத்தி வருவது, பாகிஸ்தான் அரசுக்கு, பெரிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இவரைக் கைது செய்ய, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் தான், காத்ரியின் வீடு உள்ளது. பஞ்சாப் மாகாணத்தில், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் தம்பி, முதல்வராக உள்ளார். காத்ரியை கைது செய்தால், பிரச்சனை ஏற்படும் என்பதால், நவாஸ் தலைமையிலான முஸ்லிம் லீக் கட்சி அமைதி காத்தது.

தற்போது இஸ்லாமாபாத்தில், காத்ரி ஊர்வலம் நடத்துவதால், அவரை கைது செய்தால், அவரது ஆதரவாளர்கள், தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு, நிலைமை மோசமாகும், என, பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் அஞ்சுகிறது. எனவே, காத்ரியுடன் பேச்சு வார்த்தை நடத்துவதா அல்லது கைது செய்வதா என்பதில் குழப்பம் நிலவுகிறது.

## பாகிஸ்தான் ஜனாதிபதி ஸர்தாரி குடும்பத்துடன் தப்பியோட்டம்!



பாகிஸ்தானில் அரசுக்கு எதிராக எந்நேரமும் புரட்சி ஏற்படலாம், என்ற நிலையில், ஜனாதிபதி ஸர்தாரி நாட்டை விட்டு தப்பியோடி விட்டதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தானில் மத குரு காத்ரி தலைமையில், மக்கள் போராட்டம் நடைபெற்று வருகிறது.

அதேநேரம் அரசுக்கு எதிராக, அந்நாட்டு உச்சநீதிமன்றமும், இன்னொரு முனையில் களமிறங்கியிருக்கிறது. இந்நிலையில் ஜனாதிபதி ஸர்தாரி, குடும்பத்துடன் துபாய்க்கு தப்பி ஓடி விட்டதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் ஜனாதிபதி பாகிஸ்தானிலேயே இருப்பதாகவும், விரைவில் தனது கருத்தை தெரிவிப்பார் என்றும் கூறப்படுகிறது.

## மைக்ரோசாப்ட் தேர்வில் 9 வயதுச் சிறுவன் சாதனை



மைக்ரோ.'சாப்ட் நிறுவனத்தின், அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர் தேர்வில், 9வயதே ஆன தமிழகத்தைச் சேர்ந்த பிரணவ் கல்யாண் என்ற மாணவர், வெற்றி பெற்று சாதனை படைத்திருக்கிறார். மைக்ரோசா.'ப்ட் நிறுவனம், ஏ.எஸ்.பி.டாட், நெட் பிரிவில், (ASP.NET), அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்ப வல்லுநருக்கான தேர்வை, கடந்த 12ஆம் திகதி நடத்தியிருந்தது.

கம்ப்யூட்டர் பட்டதாரிகள்தான் பொதுவாக, இத்தேர்வை எழுதுவது வழக்கம். ஆனால் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 4 ஆம் வகுப்புப் படிக்கக் கூடிய 9வயதே ஆன பிரணவ் கல்யாணும், தேர்வு எழுத அனுமதி கிடைத்தது. இத்தேர்வு எழுதியதுடன் மட்டுமன்றி, சிறுவன் பிரணவ் வெற்றியும் பெற்று, சாதனை படைத்துள்ளார்.

சாதனை நாயகனான பிரணவ் இன் தந்தை கல்யாண், தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில், ஜல்லிக்கட்டுக்குப் புகழ்பெற்ற பாலமேட்டைச் சேர்ந்தவர். இவர் கலிபோர்னியாவில் அமெரிக்க வங்கியில், பணியாற்றி வருகிறார். பிரணவ்வின் தாயார் விசாலாட்சியும் அமெரிக்க வங்கியில் நிதி ஆய்வாளராக பணியாற்றுகிறார்.

பிரணவ்வின் இந்தச் சாதனைக்கு, அவரது குடும்ப நண்பர்களான மணிவண்ணன், நதியா, சதீஷ் உள்ளிட்டோர்தான் உந்துசக்தியாக இருந்துள்ளனர் என்று, அவரது பெற்றோர் பெருமைப்படுகின்றனர்.

## ரஷ்யாவுக்கு உளவு வேலை பார்த்த தம்பதியர் கைது



ஜேர்மனியில் இருபதாண்டு களுக்கும் மேலாக, ஒரு மத்திய தரக் குடும்பம், ரஷ்யாவுக்கு உளவு வேலை பார்த்துள்ளனர். இவர்களின் உண்மைப் பெயர்களை, ஜேர்மனிப் பொலிசார் வெளியிடவில்லை. இவர்களின் மகளுக்குக் கூட, தன் பெற்றோர் ரஷ்ய உளவாளி என்பது தெரிந்திருக்கவில்லை.

ஆண்டிரியாஸ், ஹீட்ருன் என்று, பொலிசாரால் பெயர் சூட்டப்பட்ட இத்தம்பதியர், 1998ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்தின் முபுடீ (அரசு பாதுகாப்புக் குழு) மூலமாக, ஜேர்மனியில் குடியமர்த்தப்பட்டனர். பின்பு இவர்கள் ஸ்ரசு என்ற, அயல்நாட்டு உளவுப்பணிப் பிரிவில், வேலை பார்த்து வந்தனர். இத்தம்பதியினர் சார்பாக வாதாடும் வழக்கறிஞர், ஹோர்ஸ்ட்-பீட்டர் போஷ்கே, இவர்களுக்கு ரஷ்யக் குடியுரிமை பெற்றவர் என்றே சொல்லிவந்தனர்.

இவர்களில் ஒருவர், பிளவுபட்ட ஜேர்மனியில் வந்து குடியேறினர், அடுத்தவர் 1990ஆம் ஆண்டில் இங்கு வந்தனர். கடந்த மூன்றாண்டுகளாக இவர்களின் நடவடிக்கை குறித்து, மத்தியகூட்டரசு ஆராய்ந்துள்ளது. நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல்,ராணுவ ரகசியங்களைக் கடத்துவதே, இவர்களின் உளவுப் பணியாகும்.

குறிப்பாக கிழக்கு ஐரோப்பிய, மற்றும் மத்தியஆசியா நாடுகளுக்கான, நேட்டோவின் ராணுவ ரகசியங்களைக், கடத்தி வர வேண்டும். இத்தகவலை மத்தியக் கூட்டரசு வழக்கறிஞர், உல்.'ப் ஸுக்மண்ட் தெரிவித்தார்.

## இளவரிசி கேட் மிடில்டனுக்கு



பிரிட்டன் இளவரசர் வில்லியம், தனது காதலியான கேட் மிடில்னை, கடந்த 2011ஆம் ஆண்டு, ஏப்ரல் 29ஆம் திகதி திருமணம் செய்து கொண்டார். தற்போது கர்ப்பிணியாக இருக்கும் கேட் மிடில்டனுக்கு, எதிர்வரும் ஜுலை மாதம் பிரசவம் நடைபெறும் என, பக்கிங்காம் அரண்மனை அதிகாரபூர்வமாக அறிவித்தது. இதனையடுத்து இங்கிலாந்து மக்களிடையே, பல்வேறு யூகங்களும், எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளன.

கேட் மிடில்டனுக்கு பிறக்கும் குழந்தை, பெண்ணாக இருந்தால் ''இளவரசி பட்டம்'' வழங்கப்படும் என்று, ஏற்கனவே அரண்மனைவட்டாரங்கள் அறிவித்திருந்தன. இந்நிலையில் ஜுலை மாதம் நடைபெறவுள்ள பிரசவத்தில், நிச்சயமாக பெண் குழந்தை தான் பிறக்கும் என்பது, இங்கிலாந்து மக்களின் கருத்தாகும். கார் விபத்தில் அகால மரணம் அடைந்த, இளவரசி டயானாவின் பிறந்த திகதி 01-07-1961 ஆகும். எனவே ஜுலை 1ஆம் திகதி அன்று, கேட் மிடில்டனுக்கு பெண் குழந்தை பிறக்கும், அந்த குழந்தைக்கு டயானா என 'பெயர் சூட்டப்படும் என்று, ஒரு தரப்பினர் கருத்து கூறி வருகின்றனர். பிறக்கப் போவது ஆணா? பெண்ணா? என்பது ஜுலை பிறந்தால் தெரிந்துவிடும்.

## சிரியா ஜனாதிபதி போர்க் கப்பலில் தஞ்சம்! ரஷ்யா உதவுகிறது



சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஜனாதிபதி அசாத், குடும்பத்தினருடன் போர்க் கப்பலில் தஞ்சம் அடைந்துள்ளதாக, தகவல் வெளியாகி உள்ளது. சிரியாவில் ஜனாதிபதி அஷாத் பதவி விலகக் கோரி, கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், போராட்டங்கள் நடந்து வருகின்றன. இவர்களை ஒடுக்க இராணுவம் வான்வழித் தாக்குதல், நடத்தி வருகிறது. இச்சண்டையில் இதுவரையில் 60,000 பேர் பலியாகி உள்ளனர். இந்நிலையில் ஜனாதிபதி அசாத், குடும்பத்தினருடன் டமாஸ்கசை விட்டு வெளியேறி விட்டதாகவும், போர்க் கப்பலில் தஞ்சமடைந்துள்ளதாகவும், தகவல் வெளியாகியுள்ளது. மேலும் ரஷ்யா கடற்படையினர், இவருக்கு பாதுகாப்பு அளித்து வருகின்றனர். என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## செவ்வாய் கிரகத்தில் துளையிட்டு ஆய்வு செய்கிறது கியூரியாசிட்டி

செவ்வாய் கிரகத்தில், மனிதர்கள் வாழ முடியுமா என்பது குறித்து, நாசா பல்வேறு ஆராச்சிகளை செய்து வருகிறது. இந்நிலையில் செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக, நாசாவின் கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் அனுப்பப்பட்டது. அங்கு பல்வேறு ஆராச்சிகளை மேற்கொண்டு வரும் இவ் விண்கலம், தற்போது துளையிடும் ஆராச்சிக்குத் தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கான திட்ட வரைவு தயாராக இருப்பதாகவும், துளையிடுவதற்கான இடத்தைத் தெரிவு செய்துவிட்டதாகவும், திட்ட மேலாளர் ரிச்சர்ட் குக் தெரிவித்துள்ளார். இன்னும் சில நாட்களில், அந்த இடத்திற்கு சென்று சேர்ந்த பிறகு, இரு வார காலத்தில் இந்தத் துளையிடும் பணி நடைபெறும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு, மறைந்த துணை மேலாளர் ஜான் கிளீனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# விந்தை உலகம்

## வியக்கவைக்கும் சீனாவின் சொர்க்க வாசல்


*சீனாவின் TIANMEN மலையில், HEAVEN'S GATE அல்லது சொர்க்க வாசல் எனும் பகுதி, நிலத்திலிருந்து 1518 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளது. இந்த மர்ம வாசலுக்குச் செல்லுவதற்கு படிக்கட்டுக் களும் அமைக்கப்பட்டுள்ளன.*

*இந்த மர்ம வாசலில் 131.5 மீற்றர் உயரமும், 57 மீற்றர் அகலமும் கொண்ட, பாரிய துளை காணப் படுகிறது. இரண்டு சுப்பர்சொனிக் விமானங்கள், இதனுள் சமாந்தரமாகச் சென்று வரலாம். துளையின் மறுபுறம், பெரியமலைகளும் திறந்த வெளிகளும் காணப்படுகிறது.*



## கடல் நடுவில் அதிசய வீடு

THAT LOT எனப்படுவது, இந்தோனேசியாவின் பாலிக்கடற்கரைப் பகுதியில் காணப்படும், மிகப்பெரிய ஓர் பாறையாகும். இப் பாறையானது இயற்கையிலேயே, அழகிய வீடு போன்று காணப் படுவதுடன், மேலும் அலங்கரிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க வாசலாக தற்போது திகழ்கின்றது.



## கலைநயம்மிக்க ஓர் படைப்பு


நைஜீரியா நாட்டைச் சேர்ந்த Ojo Obaniyi எனும் 40 வயதான நபர், இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி, கலைநயம் மிக்க பொருட்களை உருவாக்குவதில் வல்லவர். இவர் தனது விநோத சிந்தனையின் அடிப்படையில், பனை மரத்தின் ஓலைகளைப் பயன்படுத்தி, வாகனம் ஒன்றினை வித்தியாசமான முறையில் அலங்கரித்துள்ளார். இந்த நபர் பனை ஓலைகளைப் பயன்படுத்தி, கலைப்படைப்புகளை உருவாக்குவத்தில், 20 வருடம் அனுபவம் வாய்ந்தவர்.



## ஐஸ்லாந்தில் அதிசய வெந்நீரூற்றுக்கள்

ஐஸ்லாந்து அதிகளவில் வெந்நீரூற்றுக்களைக் கொண்ட ஒரு நாடாகும். இத்தீவு முழுவதும், இவ்வகையான நீரூற்றுக்களே பரவிக் காணப்படுகின்றன. 5-8 நிமிடங்களுக்கு ஒரு தடவை, 30 மீற்றர் உயரத் திற்கு நீரை வெளியேற்றக்கூடிய ஒரு வெந்நீரூற்று Strokur என்ற இடதின் அருகில் காணப்படுகிறது.

வெந்நீரூற்று அல்லது வெந்நீர்ச்சுனை (Geyser) என்பது, நீரானது நீராவியுடன் சேர்ந்து, குறிப்பிட்ட இடைவெளியில் கிளர்ந்தெழுந்து, மேல் நோக்கி மிகவும் வேகத்துடன் வெளியேற்றப்படும் ஓர் நீர் நிலையாகும். குறிப்பிட்ட சில நிலத்தடி நீர்ப்படுக்கைகளில் மட்டுமே, இவ்வகையான வெந்நீரூற்றுகள் உருவாகின்றன. புவியின் ஒரு சில இடங்களின் மட்டுமே, இவ்வகையான வெந்நீரூற்றுக்கள் இருப்பதனால், இது ஒரு அரிதான தோற்றப்பாடகவே கருதப்படுகின்றது.




**புதியதோர் ஆண்டில் , புதிய முயற்சியில் , உடனடியான வேலை வாய்ப்புக்கள்,**
**கொழும்பை அண்மித்த பிரதேசங்களில்..**

- பிரதான தொழிற்சாலைகளில் லேபல் / உற்பத்தி / பொதியிடல் பிரிவுக்கு 17 - 50 வயது ஆண், பெண் இருபாலரும்.
- கனரக வாகன சாரதிகள் / மென்ரக வாகன சாரதிகளும்
- தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தவர்களுக்கும்
- தனியார் துறைமுக / விமான நிலையம்
- கட்டட நிர்மானத் துறையில் மேசன், தச்சு, எலக்ரீசியன், பிளம்பர், கையுதவியாளர்.

**தொழிலடிப்படையில் சம்பளம் 18000/= - 40000/=**

**உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் .**

விருகை தரும் நாளிலே வேலை

Sakya (PVT) LTD. வைரபுளியங்குளம் சந்தி, வவுனியா. T.P-No-0775561883



NEW DESIGN MOBILE CENTER

- கையடக்கத் தொலைபேசி முகவர்
- போன் மென்பொருள் (Soft ware)
- போன் திருத்துனர்
- போன் லொக் உடைத்தல்

A.M.M .Jasly
Proprietor
0716108061, 0785145258





#204, பசார் வீதி, வவுனியா



#204, Bazaar Street, vavuniya.

NOKIA | SAMSUNG | Sony Ericsson | MOTOROLA | LG | vodafone | Dialog | Airtel Express Yourself | Sri Lanka Telecom Mobitel We Care. Always. | HUTCH | etisalat



இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H பதிப்பகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 20.01.2013 அன்று வெளியிடப்பட்டது.